

# நினைவு மலர்



அமரர்

## இலட்சுமிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(ஆசைப்பிள்ளை ரீச்சர்)

அவர்கள்

**30.06.2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'



**தோற்றம்**
**03.03.1942**

**மறைவு**
**27.05.2012**

அமரர்

# இலட்சுமிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(ஆசிரியை) அவர்கள்

## திதி வெண்பா

வருடம் நந்தன வைகாசி வளர்பிறை
அருளுறு ஷஷ்டித் திதியிலே – பெருமையாம்
ஆசிரியை லட்சுமியும் ஆண்டவன் பாதத்தைப்
பூசிக்கச் சென்றடைந்தார் நன்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழிபுரம்

**திரு.திருமதி மகேஸ்வரன் ஞானாம்பிகை பெற்றாரின் பிள்ளைகளான**
**செல்வி - கார்த்திகா, செல்வி - நிருத்திகா**

"சின்னப்பாட்டி" என்று சின்னதாய் அழைப்போமே....
"நைஜீரியா பாட்டி" என்றும் நயமுடன் அழைப்போமே
இவ்வாறு நாமழைப்பது உங்களுக்குக் கேட்கவில்லையா?
எங்கு சென்று விட்டீர்கள்?
நீங்கள் இந்த உலகத்தை விட்டு நீங்கினாலும்
உங்கள் நினைவுகள் - சின்னங்கள்
என்றும் எம் மனதை விட்டு அழியாது

பார் போற்றும் உறவிலே பாட்டியாய் எமக்கு வந்து
அறிவுரைகள் சொல்லியும், அன்பினை ஊட்டியும்
ஆசானாய்த் திகழ்ந்தீர்கள்
2005இல் யாழ் - வந்து எம்மையும் உம்பால்
ஈர்த்து மகிழ்வித்தது மட்டுமல்ல
2010இல் கொழும்புக்கு வந்து உங்களைப் பார்த்து
உங்களுடன் உறவாடியதை மறக்க முடியுமா?

கொடிய நோய் வந்து உங்களை இவ்வாறு
களங்கப்படுத்தும் என்று நாம் கனவிலும் நினைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசிரியர் ஒருபோதும் மரணிப்பதில்லை

ஆசைப்பிள்ளை ரீச்சர் என எல்லோராலும் ஆசையாகவும், அன்பாகவும் அழைக்கப்பட்ட அணையாத தீபம் தன் சோபையை இழந்துவிட்டது. ஆனால் அவர் ஏற்றிய தீபங்கள் இன்றும் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. அதனால் தான், நல்லாசிரியன் என்றும் மரணிப்பதில்லை என்பார்கள்.

அது 1964ஆம் ஆண்டு யாழ் - நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் தரம் - 6 இல் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். பண்டத்தரிப்பை வசிப்பிடமாகக் கொண்ட திரு.எட்வேட் நவரட்ணசிங்கம் என்ற அதிபரின் கீழ் பாடசாலை பெரும் கஷ்டங்களின் மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருந்தது. அலை மோதும் நீண்ட பெருங்கடலைத் தாண்டி வந்து எமக்கு ஒளிதந்த ஆசான்களை நினைத்துப் பார்க்கின்றேன். அவர்களுள் இரட்டைப் பின்னர், கம்பீரமான தோற்றம், கணீரென்ற வெண்கலக் குரல், கனிவான பார்வை, எப்பாடத்தையும் கற்பிக்கக்கூடிய பல்துறை ஆற்றல், ஆசிரியப் பணியில் அர்ப்பணிப்பு என ஆசைப்பிள்ளை ரீச்சரின் குண இயல்பு பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். இமயத்தை மிஞ்சிய அவரது பணி மெய் சிலிர்க்க வைக்கின்றது.

அவரது துயரச்செய்தி கேட்டு ஒரு கணம் நிலை குலைந்தேன். எம்மை உருவாக்குவதற்குப் பங்களித்த கல்வித்தாய்க்கு - ஆசைப்பிள்ளை ரீச்சருக்கு சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்து கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் குறிப்பாக ரீச்சரின் சகோதரன் எமது முன்னைநாள் கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.பொன்னையா அவர்களின் குடும்பத்தினருக்கும் நெடுந்தீவு மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி, சாந்தி, சாந்தி

**நெடுந்தீவு கிழக்கு,**
**நெடுந்தீவு.**

**இ.இந்திரராசா**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்**
**வலயக் கல்வி அலுவலகம்**
**வவுனியா வடக்கு,**
**புளியங்குளம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான கணித ஆசிரியை

எங்கள் கல்லூரியின் புகழ்பூத்த கணித ஆசிரியை "ஆசைப்பிள்ளை ரீச்சர்" அவர்களின் மறைவுச் செய்தி அவரிடம் கற்ற மாணவர்களுக்கு அதிர்ச்சியைத் தருவதாயிருந்தது. ஆயிரத்து தொளாயிரத்து அறுபதுகளின் பிற்பகுதியும் எழுபதுகளின் முற்பகுதியும் அன்னாரின் கணித பாடக் கற்பித்தலால் விக்ரோறியாக் கல்லூரி வளாகம் நிறைந்திருந்த காலமாகும். மாணவர்களுடன் அன்பாகவும் அரவணைப்பாகவும் அதே வேளை கண்டிப்புடனும் கற்பித்தலில் ஈடுபட்ட அவர் ஏனைய ஆசிரியர்களாலும் மாணவர் களாலும் மிகவும் விருப்பத்துடன் அன்பு செலுத்தப்பட்டவராவார். எனக்கு நன்றாக ஞாபகமுள்ள விடயம் அவரது நேரந்தவறாத தன்மையும் மிக ஒழுங்காகப் பாடசாலைக்குச் சமூகமளிக்கும் இயல்பும்.நேரத்துடனும் கிரமமாகவும் கல்லூரிக்கு வருகை தரும் இவர் கணித பாடத்தை மாணவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் கற்பிக்கும் ஆற்றல் கொண்டவர் திரு.தம்பு அவர்களும் திரு.சிவஞானம் அவர்களும் அதிபர்களாக இருந்த காலத்தில் நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் பக்கத் துணையாக உதவுபவராக இருந்தார்.

நிறைவான கல்விப் பணியாற்றி கனடாவில் ஓய்வு நிலையில் தன் குடும்பத்தினருடன் நிறைந்த வாழ்வு வாழ்ந்த இவர் அண்மையில் மறைந்த செய்தி அறிந்து துயரடைந்தோம். எனினும் மனித வாழ்வில் இது தவிர்க்க முடியாது என்ற உணர்வுடனும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திப்பதுடன் குடும்பத்தவர்களின் துயரிலும் பங்கு கொள்கிறோம்.

ஓம் சாந்தி!

**வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்,**
**அதிபர், யா/விக்ரோறியாக் கல்லூரி,**
**சுழிபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையருள் மாணிக்கம்

மனிதர் பிறப்பதும் வாழ்வதும் இறப்பதும் இயற்கையாக இறைவனால் நடாத்தப்படுகின்றது. பிறந்தவர்களுள் வாழ்வாங்கு வாழ்ந்து மனிதர்களால் போற்றப்பட்டு புகழோடு வாழ்வோர் சிலர். இப்படியான சில மனிதருள் முன்னணியில் வைத்து எண்ணக் கூடிய தன்மையை அடைந்தவர்தான் சிவசுப்பிரமணியம் இலட்சுமிப் பிள்ளை ஆவார்.

எப்போதும் இனிமையான பேச்சு, எடுப்பான தோற்றம், புன்முறுவல் பூத்த முகம் ,லக்ஷ்மீகரம் பொருந்திய அன்புப் பார்வை வருகின்ற விருந்தினரை சுற்றத்தவர்களை ஆசிரியர்களை மாணவர்களை இனிமையாக வரவேற்று உபசரித்து பழகும் உயர்ந்த பண்பு, இவையெல்லாம் பொருந்திய ஒரு சற்குணவதியாவும் மாதர் குல மாணிக்கமாகவும் திகழ்ந்தவர் சுழிபுரம் பெற்றெடுத்த ஆசிரியர் ஸ்ரீ,லட்சுமிப்பிள்ளை ஆவார்.

மாணவர்கட்கு கணித பாடத்தை மிகவும் சிறப்பாகக் கற்பித்து உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெற்றவர். தன்னுடைய பலனைக் கருதாது மாணவர்கட்கு விசேட மேலதிக வகுப்புக்களை நடாத்தி அவர்களை மகிழ்வித்தார். எடுக்கின்ற கருமத்தை மிகவும் சிறப்பாக வழி நடாத்தக் கூடிய சிறப்பு ஆற்றல் உடையவர்.கல்வி உலகில் இலட்சுமிப்பிள்ளை ஆசிரியரும் அவரின் கணவர் சிவசுப்பிரமணியமும் அவரின் உடன் பிறப்புக்களும் ஒரு ஆசிரிய ஜோதியாகத் திகழ்ந்தவர்கள் என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறப் பூங்காவில் இன்பம் கண்டு நல்ல குழந்தைகளைப் பெற்று அவர்களை கல்வி மான்களாக்கிச் சந்தோசப்பட்டவர்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து பேரின்பம் அடைந்தவர். இறுதியில் இறைவன் விதித்த விதிப்படி இறைவன் பாதக் கமலத்தில் போய்ச் சேர்ந்து விட்டார். அன்னாரின் ஆன்மா நித்திய சாந்தியடைய எங்கள் குல தெய்வம் சுளிபுரம் பத்திரகாளியைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!

இங்ஙனம்,
திரு.வ.நடராசா (இளைப்பாறிய ஆசிரியர் அரியாலை,
சிவகீத அடியார்.
1ம் தர விசேட ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைப்பிள்ளை ரீச்சர் என்னும் அன்புத்தாய்

அந்த நாட்கள் மறக்க முடியாதவை. சுழிபுரம் அரசினர் விக்டோரியாக் கல்லூரியில் பயின்ற நாட்கள் அவை. தரம் 2 முதல் தரம் 8 வரை அங்கு கல்வி கற்ற காலத்திலே பசுமை மிகுந்த நினைவுகளில் வந்து நிறைக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுள் என் மனதில் முக்கிய இடத்தைப்பிடிப்பவர் ஆசைப்பிள்ளை ரீச்சர் ஆவார். நான் இவரிடம் கணிதம் கற்ற மாணவன். அன்பான குணம், அளவாள கண்டிப்பு, எந்நேரமும் முகம் நிறைந்த சிரிப்பு, சற்றே உயர்ந்த குரல் ஆனால் வெண்கலக்குரல். பின்னிவிட்ட இரண்டு அடர்த்தியான நீண்ட கூந்தல், செந்நிறத்தோடு கூடிய மாநிறம். மாணவரின் நலனே தன் நலன் எனக் கருதும் மனப்பாங்கு. இவையே ஆசைப்பிள்ளை ரீச்சர்.

அவரிடம் கண்ட மேலும் சில அம்சங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்கு வருகின்றன. எவரையும் அன்பாக அழைப்பார். அன்பாக வரவேற்பார். மாணவர்களைப் பாராட்டி மேலும் படிக்க உற்சாகப்படுத்துவார். ஆறாம் வகுப்பில் குடியின் தீமை என்ற நாடகத்தில் எனக்கு பெண்மணி ஒருவரின் பாத்திரம் வழங்கப்பட்டது.அப்போது என் மனச்சஞ்சலத்தைப் போக்கி உற்சாகம் தந்து எப்படி நடிக்க வேண்டும் என அவர் காட்டிய வழிமுறைஇன்றும் எனக்குப் பயன்படுகிறது.

கணவர் ஒரு கணித மேதை. ஆசிரியத் தொழில் மூலம் உயர்ந்து நிற்கும் சகோதரர்கள். அவரின் உண்மையான கற்பித்தலால் உயர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் ரீச்சரின் சொந்தப்பிள்ளைகள். இவையே ரீச்சரின் கற்பித்தலுக்குக் கிடைத்த நற்சான்றிதழ்கள். தனது தம்பியாரான பொன்னையா என்பவருக்கு பாடம் சொல்லிக்கொடுத்து அவரை பட்டதாரியாக்கிய பெருமை ரீச்சருக்குரியதாகும். பொன்னையா சேர் அவர்கள் வவுனியாவில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், வலயக்கல்விப் பணிப்பாளராகவும் நம் கண் முன் வேவையாற்றி இன்று ஓய்வுபெற்றுள்ளார். ரீச்சரிடம் உள்ள நற்பண்புகளை அவரது சகோதரரிடமும் நாம் கண்டுள்ளோம்.

ரீச்சர் கனடாவில் இருந்த காலத்திலும் என்னைப்பற்றி கேட்டறிந்தமை, என்மீது காட்டிய கரிசனை, தனது மாணவன் இன்று வவுனியாவில் தமிழ் அருவி என்ற பெயரில் புகழுடன் இருப்பது கண்டு பெருமைப்பட்ட விடயம் எனது செவியைக் குளிர்விக்கின்றது. ஆசைப்பிள்ளை ரீச்சரின் மறைவு கேட்டு மனதுள் அழுதேன். வீரகேசரிப் பத்திரிகையில் அவரது உருவப்படத்தைப் பார்த்தேன். அதிலும் அவருடைய. அதே சிரிப்பு, கண்களில் அதே ஒளி அவரது ஆன்மா என்றும் இறைவனடியில் இணைந்திருந்து தன் மாணவர்களை வாழ்த்திக் கொண்டே இருக்கும். அவரது பிரிவால் வாடும் அன்புக் கணவர், சகோதரர்கள் மற்றும் அவரது உறவினர்களுக்கும் எனது மனப்பூர்வமான ஆறுதல்களைத் தெரிவிக்கிள்றேன்.

**தமிழருவி: த. சிவகுமாரன்** (B.A Hons) **ஆசிரியர், வுவனியா தமிழ் தேசிய கல்லூரி, தலைவர் வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கம், அமைப்பாளர் கம்பன் கழகம், காரைநகர்போஷகர், அகில இலங்கை சேக்கிழார் மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை - யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வெளிநாட்டில் வசித்து வரும் உறவினர்களின் வேண்டுகோளுக்கு அமையப் பூர்வீக உறவுகளின் பெயர்களும் மூதாதையோர் பெயர்களும் இடம்பெறுகின்றன.**

அமரர் - ஆசைப்பிள்ளை செல்லம்மா( செல்லமுத்து)வின் தாய் தந்தை வழி உறவுகளும் - அவர்கள் வாழ்ந்த மண்ணின் முகவரிகளும் :- **மாதகல்** கணபதிப்பிள்ளை தெய்வா னைப்பிள்ளை தம்பதிகள் மாமன், மாமி முறையானவர்கள் அவர்களின் பிள்ளைகளாகிய மாசில்லாமணி, இராமசாமி, கந்தையர், பாக்கியம், செல்லம்மா, கதிரவேலு, அகியோரின் வம்சங்கள் - வாரிசுகள்

**2. திருநெல்வேலி** :- அரியாலை இராமுப்பிள்ளையின் உடன்பிறந்த தம்பியாராகிய சிவகுரு (சின்னப்பிள்ளை) அவர்களின் வாரிசுகளான கைலாயப்பிள்ளை, துரையப்பா, சண்முகம், ஆகிய சகோதர்களின் வழித் தோன்றல்களும் - மேலும் அமரர்- இராமுப்பிள்ளையின் பெரியதந்தை வேலுப்பிள்ளையின் பிள்ளை களாகிய அன்னம்மா, செல்லம்மா அவர்களின் வாரிசுகளும்..... உலகின் பலபாகங்கலும் பரந்து வாழும் (குமதினி (அமெரிக்கா) குடும்பம் தொடங்கி சுளிபுரம் - ஞானாம்பிகை (ஆசிரியையின் துணைவரான திரு.மகேஸ்வரன் அவர்களும் அடங்குவர்

**3. காரைநகர்** ஊரில் வாழ்ந்த ........ விக்காவில் வேலுப்பிள்ளை நடுவிலாற்ரை ஆறுமுகம், வெற்றிவேலு, கணபதிப்பிள்ளை, தம்பிப்பிள்ளை வழித்தோன்றல்களாகிய இன்று உயிர்வாழும் திரு.த. உத்தமசீலன் அவர்களும் உள்ளடங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. உடுவில் கிராமத்தில்.** ஆறுமுகம் + ஐயாத்துரை + கதிரேசு பரம்பரையுடன் தபாலதிபர் அமரர் தம்பு அவர்களின் குடும்பமும் வாரிசுகளும் அமரர் - கந்தையா + இராசமணி தம்பிராசா அவர்களின் வழித்தோன்றல்களும் ..... அவர்களையொட்டி அமரர் - திருமதி நாகரத்தினம் அண்ணாமலை (சுழிபுரம்) அவர்களும் உள்ளடங்குவர்.

**5. அரியாலை ஊரில்** அமரர் - பார்வதி உடன்பிறப்புக்களான கதிராசி+ அம்பலவர் பரம்பரையின் சின்னத்துரை, மாணிக்கம் பரம்பரையில் இன்று மலேசியாவில் உயிர்வாழும் திருமதி மோகனாம்பிகை சிவப்பிரகாசம் அவர்களுடன் லண்டனில் வாழும் திருமதி திலகவதி பரமசாமி அவர்களும் அவர்களது பரம்பரையும் உள்ளடங்குவதுடன் கொழும்பில் வாழும் சங்கீத ஆசிரியை திருமதி கலாராணி + ஸ்ரீஸ்கந்தராசா அவர்களது சகோதர சகோதரிகளும் உள்ளடங்குவர்

**6. அராலி கிராமத்தில்:** வண்டில் எனப்படும் கரத்தை வாகனத்தை திறம்பட வடிவமைத்த அராலி காத்தார் பரம்பரையும் தபால் அதிபர் செல்லப்பர் பரம்பரையும் அதனையொட்டி இன்று கனடா ரொறன்டோ நாட்டில் வாழும் திருமதி (பேபி) லஷ்மி சண்முகராஜா அவர்களின் பிள்ளைகள் சந்ததியினரும் இந்தியாவில் வாழும் திரு. சங்கர் சண்முகராஜாவும் உள்ளடங்குவர்.அமரர் கந்தசாமி+ பரமேஸ்வரி (அருள்) அவர்களும் சிற்பவேந்தர் அமரர் அரசுமாஸ்ரர்) கணபதிப்பிள்ளை அவர்களின் சகோதரர்சிற்ப விற்பன்னர் திரு அமரசிங்கம் அவர்களும் அவரது சகோதரர் அமரர் கனகரத்தினம் + புஸ்பகுணம் (திசமனை) வாரிசுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்திமாஸ்ரர் (திசமளை) ஆசிரியை திருமதி புஸ்பராணி சுகுமார் (திசமளை) அவர்களும் அடங்குவர். அத்துடன் அமரர் திருமதி மாரிமுத்து கைலாயபிள்ளை அன்னாரின் அயலும் உறவுமான (ஓய்வு பெற்ற கிராமிய அபிவிருத்தி உயரதிகாரி) திருமதி பொன்திருமலர் சிவானந்தம் (அராலி) அவர்களும் உள்ளடங்குவர்.

**7. சுழிபுரம் கிராமத்தில்** தந்தை வழி உறவுகளான திருமதி கதிரவேலு - தங்கமுத்து திருமதி - பூரணம் முத்தையா, திருமதி (உடுவில்) திருநெல்வேலி) அன்னம்மா சிவகுரு (காரைநகர்) திருமதி - தாயார் சின்னத்தம்பி பொன்னம்பலம் அவர்களது அன்னை கருத்தம்மா அவர்களுடன் திருமதி இராமலிங்கம் திருமதி - முருகேசு - அவர்களின் வழித்தோன்றல்களாகிய பாடசாலைக் கல்வி வித்யாதரிசி அமரர் - நாகலிங்கம் + மனோன்மணி (திசமளை) (ஆசிரியை) (அவர்களது வழித்தோன்றல்களாகிய கணிதமேதை - அமரர் நா. பத்மநாதன் ஆசிரியர் அன்னாரது உடன் பிறப்புக்களான பிரான்ஸ் நாட்டில் வாழும் திரு. நா.கமலநாதன் கனடா நாட்டில் வாழும் திரு. சோதிநாதன் அவர்களும் பாபு எனப்படும் இந்திரா தேவியும் அடங்குவர்.

**எமது தாயார் வழியில் தாயாரின் உடன் பிறப்புக்கள்**

**அரியாலை :** இராமுப்பிள்ளை கனகசபை அவர்களது பிள்ளைகள் வரதராஜா, கந்தசாமி, சிவபாலசிங்கம், நாகேந்திரராஜா குடும்பங்களும் உறவுகளும் வழித்தோன்றல்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.இராமுப்பிள்ளை கார்த்திகேசு அவர்களது பிள்ளைகள் கேதீஸ்வரன் லிங்கேஸ்வரன் , மணி, கமலாதேவி ஆகியோரின் குடும்பங்களும் உறவுகளும் வழித்தோன்றல்களும்.

3. காரைநகரில் மணம் முடித்த திருமதி. தம்பிப்பிள்ளை அன்னம்மா குடும்பமும் பிள்ளைகளும் ( உத்தமசீலன்)

4. உடுவிலில் மணம் முடித்த திருமதி பெருமாள் நாகம்மா குடும்பமும் பி...ளைகளும். (திருமதி அண்ணாமலை, சுழிபுரம்)

எமது தந்தை வழியில் உடன்பிறப்புக்கள் **சுழிபுரம்** - தந்தையின் உடன்பிறப்புக்கள் பொன்னர் ஆசைப்பிள்ளை (தந்தை) கிருஷ்ண பிள்ளை, நாகமுத்து, சின்னப்பு, இராமலிங்கம், சின்னவர், தாமோதரம்பிள்ளை, திருமதி . குமரேசு சின்னத்தங்கம் திருமதி. சபாபதி வள்ளியம்மை திருமதி . மாரிமுத்து கந்தையா (அரியாலை) குடும்பங்களும் அவர்களது வாரிசுகளும் உறவுகளும்

**குறிப்பு:-** மேலே தரப்பட்டவை சுருக்கமான குறிப்புகளாகும். ஆதனால் சில விபரங்கள் தவறவிடப்பட்டிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றேன்

எனது சகோதரி திருமதி இலட்சுமிப்பிள்ளை - சிவசுப்பிர மணியம் கனடாவில் இறந்த செய்தி கேட்டு யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் வசிக்கும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பத்திரிகை வாயிலாக அறிவித்த போது அந்த அறிவித்தலை ஏற்று தொலைபேசி மூலம் துயரங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் நேரடியாக வந்து சுழிபுரத்தில் இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வில் (03.06.2012) கலந்து கொண்டவர்களுக்கும் அந்தியேட்டி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் 30.06.2012 உணவு வகைகளை வழங்கிய அன்பர்களுக்கும் கனடாவில் அச்சிட்ட இந்தப் புத்தகத்தை யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு வழங்கிய அன்ரா டிஜிற்றல் அச்சகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆ.பொன்னையா (சகோதரன்)**
**ஒய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்**
**அகில இலங்கை சமாதான நீதவான்.**
**இலங்கை கல்விநிர்வாக சேவை உத்தியோகத்தர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பாசமிகு அம்மாவுக்கு
இப் பாமாலையை
சமர்ப்பணம் செய்கின்றோம்

ஓம் சாந்தி!
ஓம் சாந்தி!!
ஓம் சாந்தி!!!





இங்ஙனம்

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நினைவுமலர்



## அமரர் திருமதி. இலட்சுமிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (ஆசிரியை)

தோற்றம்
**03.03.1942**

மறைவு
**27.05.2012**

### திதிவெண்பா

வருடம் நந்தன வைகாசி வளர்பிறை
அருளுறு ஷஷ்டித் திதியிலே - பெருமையாம்
ஆசிரியை லட்சுமியும் ஆண்டவன் பாதத்தைப்
பூசிக்கச் சென்றடைந்தார் நன்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானை
காதலால் கூப்புவர் தம்கை

-கபிலதேவர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்

## தேவாரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

தோடுடைய செவியன்விடை ஏறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்
தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பெம்மா னிவனன்றே.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட் டானத்துறை யம்மானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தே னடியே னதிகைக்கெடில
வீரட் டானத்துறை யம்மானே

பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால்
இனியாரை நினைக்கேனே

## திருவாசகம்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமான் எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மேலாகப்
பதைத்து உருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளகந்தாழ் நின்று உச்சியளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லால்
கண்ணிணையும் மரமாம் தீவினையினேற்கே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

எதிரிலாத பக்திதனை மேவி
இனிய தாணினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் உருவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிர்காம வெற்பினுறை வோனே
கனக மேரு வொர்த்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்ந்த பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத் தரு பத்தித் திரு நகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர

முக்கட் பர மற்கச் சுருதியின்
முற்பட் டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும்

பத்துத் தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக் கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில்

பத்தற் கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத் தொடு ரட்சித் தருள்வதும்

தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு

திக்குப் பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு
சித்ரப் பவு ரிக்குத் தரிகடக

கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகு குகு
குத்திப் புதை புக்குப் பிடியென

கொட்புற் றெழ நட்பற் றவுணரை
வெட்டிப் பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை யாழ் / சுளிபுரம் பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், நைஜீரியா - மற்றும் கனடா, மொன்றியலை வாழ்விடமாகவும் கொண்ட அமரர். இலட்சுமிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (கணித ஆசிரியை) அவர்களின் வாழ்க்கை வரலாறு.

இந்துமகா சமுத்திரத்தின் முத்தென மிளிரும் இலங்கை மணித்திருநாட்டின் மணிமகுடமாகத் திகழும் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் மேற்குப் பகுதியில் "சோழியபுரம்" என ஆதியில் வழங்கிக் காலப்போக்கில் "சுளிபுரம்" என்ற சீரோங்கு கிராமத்தில் ஸ்ரீபத்திரகாளி கோவிலடிச் சூழலில் வாழ்ந்த ஆசைப்பிள்ளை + செல்லம்மா (செல்லமுத்து) தம்பதிகளின் சின்னமகளாக இலட்சுமிப்பிள்ளை அவர்கள் 1942ம் வருடம் மார்ச் மாதம் 3ம் நாள் மாசிமாதப் பூரம் நட்சத்திரத்தில் பிறந்தார்.

இவரது தந்தையார் சுழிபுரத்திலும் தாயார் யாழ்/ அரியாலையிலும் பிறந்தவர்களாவர். இவருடன் பிறந்த பத்துப்பேரில் மூவர் மட்டுமே உயிர்தப்பி இவருடன் வாழ்ந்தனர். இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ்/பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையில் கற்று திறமைச்சித்தி பெற்றதால் வேலணை மத்திய கல்லூரியில் சேர்ந்தார். அரசாங்கச் செலவில் தனது உயர்கல்வியைப் பெற்றதுடன் - ஓட்டப்போட்டி, வலைப்பந்தாட்டப் போட்டி, பெண்கள் சாரணிய இயக்கம் போன்றவற்றில் பங்குபற்றி வெற்றியீட்டி தனது கல்லூரிக்கு பெருமை தேடித் ; ந்தார்.

அதனையொட்டி தனது பதினெட்டாம் வயதினிலே ஆசிரிய நியமனம் கிடைக்கப் பெற்று கண்டி / வறக்காலந்த தமிழ்க்கலவன் பாடசாலையில் சிலமாதங்கள் சேவை புரிந்தார். அத்துடன் யாழ்/பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கணிதஆசிரியை பயிற்சி நெறியை இரண்டு ஆண்டுகளுக்குப் பெற்றுக் கொண்டார். கல்லூரிக் காலங்கள் போலவே ஆசிரிய கலாசாலையிலும் விளையாட்டுப் போட்டிகள், ஓட்டப் போட்டிகள் அனைத்திலும் பங்குபற்றி வெற்றி வீராங்கனையாகத் திகழ்ந்தார். இவரது வெற்றிக்குச் சான்றாக வெள்ளிக் கோப்பைகளும், தராதரப் பத்திரங்களும் சாட்சிகளாக அமைந்தன. இவ்விதம் அவர் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் ஆசிரிய சேவைக் காலத்தில் மாணவர்களை நெறிப்படுத்தவும் பயிற்சியளிக்கவும் வழிகாட்டுதலாக அமைந்தன.

ஆசிரிய பயிற்சிக்காலம் முடிவடைந்தவுடன் யாழ்/நெடுந்தீவு மகாவித்தியாலத்தில் ஒருசில மாதங்கள் கடமையாற்றி யாழ்/காரைநகர் இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகினார். இனிய குரலில் பாடுந்திறமையும், நடனம், கோலாட்டம், கும்மி போன்ற கவின்கலைகளும் கைவரப்பெற்ற இவர் மேற்படி கல்லூரியில் 5 வருடங்கள் சேவையாற்றிய பின் சுழிபுரம்/அரசினர் விக்டோறியா கல்லூரிக்கு மாற்றலாகி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கிராமமாகிய சுளிபுரத்தில் மாத்திரமே 'விக்ரோறியா' என்ற பெயரில் அரசினர் கல்லூரி அமைந்த வரலாற்றினை மாணவர்களுக்கு பெருமையாகக் கூறுவார். 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கட்டப்பட்ட இக்கல்லூரியை பிரித்தானிய நாட்டிலிருந்து வந்த அரசபரம்பரை அதிமேன்மை தங்கிய விக்ரோறியா மகாராணி அவர்கள் திறந்து வைத்த பெருமையும் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பித்த சான்றாண்மையும் கொண்டது சுழிபுரம்/அரசினர் விக்டோறியா கல்லூரி தானென்றும் இக் கல்லூரி அமைந்ததால் சுழிபுரக் கிராமமே அதி உயர்ந்த பெருமைக்குரியது என்றும் மாணவர்கட்குக் கூறுவார்.

இந்தக் காலகட்டத்தில் சுழிபுரம் திசமளை என்ற அயற்கிராமத்தில் உறவினர்களாகிய திரு. சபாபதி, திருமதி. மாணிக்கம் தம்பதிகளின் மூத்த மகனாகிய திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் வாழ்க்கைத் துணைவராக வாய்க்கப் பெற்றார். அவர் இலங்கை பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பீடப் பட்டதாரி (B.Sc) யாவார். அதன் பின்னர் 'டிப்ளோமா' பட்டத்தையும் பெற்றுக் கொண்டு யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கணித ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

இவர்களது திருமணம் சுழிபுரம்/அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய மண்டபத்தில் 1969ம் ஆண்டு அக்டோபர் மாதம் இனிதே நடந்தேறியது.

திரு. சிவசுப்பிரமணியம் அவர்களது தந்தையார் கதிரவேலு சபாபதி அவர்கள் டெனியாயா என்ற இடத்தில் தேயிலை பெருந் தோட்ட நிறுவனத்தில் காரியாலய பிரதமலிகிதராக (C.O) கடமையாற்றிய காலத்தில் டெனியாயா சிவசுப்பிரமணியர் ஆலயத்தின் அறங்காவலராகப் பணிபுரிந்த வேளையில் மகன் 1942இல் பிறந்ததனால் 'சிவசுப்பிரமணியம்' என்ற நாமத்தைச் சூட்டினாராம்.

திரு. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு தமக்கையராக திருமதி. தவமணி உலகநாதன் அவர்களும் பெரிய தங்கையாக திருமதி. தனபாக்கியம் மகாலிங்கம் அவர்களும் தம்பியாக திரு. சிவபாதசுந்தரம் (இத்தாலி) அவர்களும் சின்னத்தங்கையாக திருமதி. செல்வமணி (ராணி) ஜெயராஜா அவர்களும் உடன்பிறப்புகளாகப் பிறந்து அன்பையும், ஆதரவையும் நல்கினர்.

அதுபோலவே அமரர் இலட்சுமிப் பிள்ளைக்கு மூத்த (முதலாவது) சகோதரியான இராசம்மா என்பவர் சின்னையா அவர்களின் வாழ்க்கைத் துணைவியராகி திரு. அப்புத்துரை (C.T.B. கொழும்பு) திருமதி. கனகாம்பிகை தர்மலிங்கம் (புத்தூர்) ஆகிய இரு பிள்ளைகளைப் பெற்று மிகச்சிறிய வயதில் (18) காலமாகி விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைவிட 'மணி' என்று அழைக்கப்படும் சகோதரி வள்ளியம்மை (கைத்தொழில் இலாகா - போதனாசிரியை) சுப்பிரமணியம் என்பவரை மணந்து அமரர். சத்தியராஜன், திருமதி. சத்தியமலர் இரவீந்திரன், திரு. சத்தியகீர்த்தி ஆகியோருக்குத் தயாவார். குடும்பத்தின் கடைக் குட்டியாம் எல்லோராலும் "பொன்னப்பா" எனத் தந்தைவழி உறவு முறை கூறும் திரு. பொன்னையா (கல்வித்திணைக்களப் பணிப் பாளர் - சமாதான நீதிவான்) திருமதி. சிவநாயகி அவர்களை மணந்து அமரர் லம்போதரன் அவர்களையும், திரு. சோமஸ்காந்தன் திரு. கிரிதரன் அவர்களையும் மகன்களாகக் கொண்டார்.

கணித ஆசிரியை இலட்சுமிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் தம்பதிகளுக்கு திரு. விசாகரன், திரு. கிருபாகரன், திரு. சுதாகரன் ஆகிய பிள்ளைச் செல்வங்கள் வந்து பிறந்தனர். குழந்தைகளின் பால்யவயதுக் கல்வியும் சுளிபுரம் அரசினர் விக்டோறியாக் கல்லூரியில் கிடைத்தது. ஆசிரியை அவர்கள் அங்கு எட்டு வருடங்கள் கடமையாற்றிய பின்னர் தான் சிறுவயதில் கல்விகற்ற யாழ்/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலத்தில் ஐந்து வருடங்கள் கடமையாற்றினார்.

இக்கால கட்டத்தில் கணவனுக்கு ஆபிரிக்கா கண்டத்தின் நைஜீரியா என்ற நாட்டிலுள்ள அரசினர் கல்லூரியில் கணித ஆசிரிய நியமனம் கிடைத்தது. அதனையொட்டி இருபது வருட சேவை நிறுத்தத்துடன் ஒய்வு பெற்று தானும் குழந்தைகளுடன் நைஜீரியாவுக்கு இடம் பெயர்ந்தார்.

அவர் அங்கு சென்று இல்லத்தரசியாக மாத்திரமன்றி; தான் பெற்ற செல்வங்களுடன் அக்கம் பக்கத்திலுள்ள மாணவர்களுக்கும் கணித பாடத்துடன் விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் போதித்தார். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற முதுமொழிக்கிணங்க நான் பிறந்தநாட்டில் பெற்றுக் கொண்ட கல்விச் செல்வத்தை ஏனைய மாணவர்களுக்கும் பகிர்வதில் மனநிறைவை உணர்கிறேன் என்பார்.

நைஜீரியா நாட்டில் கல்வி கற்ற சிறுவர்கள் இளைஞர்களாக வளர்ந்தனர். மூத்த மகனாகிய திரு. விசாகரன் அவர்கள் தனது M.B.B.S பட்டத்தை முடித்துக் கொண்டு மேற்படிப்புக்காக அமெரிக்கா - நியூயோாக் சென்றார்.

இரண்டாவது மகன் திரு. கிருபாகரன் அவர்கள் இயந்திரவியல் மின்னியல் துறையில் பொறியியலாளராகி அங்குள்ள POAT நிறுவனத்தில் சிறிது காலம் பணியாற்றி விட்டு தனது விசேட சித்தியினால் அமெரிக்கா சென்று தனது முதுநிலை (M.Sc) புடன் கலாநிதி (P.hd) பட்டத்தையும் பூர்த்தி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவரான திரு. சுதாகரன் அவர்கள் கணணித்துறைப் பட்டப் படிப்பை நாட்டிலேயே முடித்துக் கொண்டு தனது முதுநிலைப் பட்டத்தை (M.Sc) அமெரிக்கா சென்று சிறப்புறக் கற்றுத் தேறினார்.

விசாகரன் புற்றுநோய் நிபுணத்துவம் + முதியவர் இறுதிக்கால விசேடக் கவனிப்பு ஆகிய துறையின் வைத்திய கலாநிதியாகவும், கிருபாகரன் G.E என்ற நிறுவனத்தின் இயந்திரவியல் ஆராய்ச்சி உயர் அதிகாரியாகவும்,

சுதாகரன் சன்பிரான்ஸ்ஸிஸ்கோவிலுள்ள 'ஓறாக்கல்' நிறுவனத்தில் கணணி வடிவமைப்பு குழுவில் ஒருவராகி "ஜுரோ" நாணயத்தை வடிவமைத்த மேதையாவார். இவர் தற்போது 'அப்பிள்' நிறுவனத்கில் இணைந்து பணியாற்றுகின்றார்.

தந்தையார் தனது கல்லூரிக் கடமைகளில் கண்ணுங் கருத்துமாகக் கடமையாற்ற அன்னையார் அவர்கள் பிள்ளைகளின் கல்வி தொழில் தமிழ் வானொலி ஊக்குவிப்பு இவற்றில் வழிகாட்டியாகவும், நிதானமுள்ளவராகவும் செயற்பட்டார். அதே போலவே அவரவற் குரிய வாழ்க்கைத் துணைகளையும் தேடி அமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்

அதன்படி Dr. விசாகரனுக்கு Dr. ஸ்ரீதேவி (சத்திரசிகிச்சை நிபுணர்) அவர்களையும் கலாநிதி கிருபாகரன்அவர்களுக்கு கலாநிதி வித்யா ஐயர் அவர்களையும், கணணிமேதை சுதாகரன் M.Sc க்கு கலாநிதி மீரா தில்லைநடேசன் அவர்களையும் வாழ்க்கைத் துணையாக்கி மகிழ்ந்தார்.

இந்த இணையர்களுக்கு முறையே லஷ்மி+லலிதா, பிரியா+ஸ்ரேயா, பிரேமா+சுஹானா ஆகிய மழலைச் செல்வங்கள் வந்து பிறந்தனர். மூன்று ஆண்மக்கள் பிறந்த வீட்டில் பட்டுப்பாவாடை, மல்லிகைப்பூ வாசனை, சலங்கைச் சப்தம், வாத்தியக் கருவிகளின் இன்னிசை போன்றவற்றை அனுபவித்திருக்காத அன்னைக்குப் பேரக்குழந்தைகள் பெண் குழந்தைகளாகப் பிறந்தமை அளவற்ற ஆனந்தமே.

அவர்கள் பிறப்பதற்கிடையில் அன்னாரை நோய் ஒன்று பீடித்தது. நோய் தன்னை ஆட்கொண்டாலும் "ஆறு பெண் குழந்தைகளும் கார்த்திகைப் பெண்கள்" என்று தொலைபேசி மூலம் உறவாடும் வேளைகளில் சொல்லிச் சொல்ல அகமகிழ்ந்து போவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகுமிடமெல்லாம் அவர்களுக்கு அழகிய பட்டுப்பாவாடைகள் வாங்கிவந்து அணிந்து பார்ப்பதுடன் முன்னழகு மாத்திமின்றி; பின்னழகையும் திருப்பிக் காட்டுமாறு அன்புரிமையுடன் கேட்பாராம்.

"கான்சர்" எனப்படும் புற்றுநோய் தாக்கியவர்கள் ஆறுமாதம் கூட உயிர்வாழ்வது அரிது. ஆனால் அன்னையவர் ஆறு ஆண்டுகள் உயிர்வாழ்ந்தார். அதற்கு அவருக்கு வைத்தியம் செய்த கனடா நாட்டு வைத்தியமேதைகளும் அருகிலிருந்து கண்ணைப் போலப் பாதுகாத்த அருமைக் கணவனும் அன்பு மகன்மாரும் ஆற்றிய சேவைகள் பணிவிடைகள் பராமரிப்புக்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை! எல்லாவற்றிற்கும் மேலாக அன்னையின் மூத்தமகன் அவர்கள் தான் கடமையாற்றிய வைத்தியசாலையில் "கீமோதெரபி" சிகிச்சையை மிக்க கவனத்துடனும் சிரத்தையுடனும் நல்கினார். அந்தக் காலக் கட்டத்தில் (2006+2007) தாயாருடன் பிறந்த சகோதரங்களை அங்கு வரவழைத்து பக்கத்தில் பார்வையிடச் செய்த அந்த தன்னிகரற்ற கைங்கரியத்தை செயற்படுத்திய ஒரு கடமை வீரராவார்.

சிறந்த மகளாக உன்னதமான மனைவியாக தலைசிறந்த தாயாக பரிவுள்ள சகோதரியாக பாசமுள்ள மாமியாக அரவணைக்கும் அப்பம்மாவாக வாழ்ந்து அமரத்துவம் எய்திய அன்னையை முன்மாதிரியாக ஏற்றுக் கொண்டு வாழும் தாய்க்குலத்திற்கு அன்னையின் செயற்பாடுகள் மிக உன்னதமான வழிகாட்டுதலாக அமையுமென்பதில் ஐயமில்லை.

அமரராகிவிட்ட ஆசிரியை இலட்சுமிப்பிள்ளை அவர்கள் சீரும், சிறப்புமாக வாழ்ந்து சுமங்கலியாகப் பொட்டோடும், பூவோடும் மறைந்த பூரணத்துவமான பெண்மணியாக

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற திருவள்ளுவர் வாக்கின்படி தெய்வநிலை எய்திய ஒருவராவாரென அனைவரும் அவருடைய ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி !
ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவர் அஞ்சலி

இலட்சுமிக்கும் எனக்கும் 1969ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திருமணம் நடைபெற்றது. இடையிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டபோதும் சுமார் 43 ஆண்டுகள் இணைந்து வாழ்ந்துள்ளோம். நாம் இருவரும் கணித ஆசிரியர்களாக இருந்தும் எமது பிள்ளைகள் தமக்கு கணிதபாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை என்னைவிட தாயிடமே எடுத்துச் சொல்வார்கள்.

இன்னும் பல வருட சேவைக்காலம் இருந்தும் தனது 38வது வயதில் இலங்கை ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்று நம்முடன் நைஜீரியாவுக்கு இடம்பெயர்ந்தார். அங்கும் கணிதபாடத்தில் பின்தங்கிய நிலையிலிருந்த பலரை தன்னுடைய திறமையினால் கணிதத்தை விருப்பு பாடமாக கொள்ள வைத்தார்.

நாம் கனடாவிற்கு இடம்பெயர்ந்த பொழுதும் தனது கற்பித்தலை வெற்றிகரமாக தொடர்ந்தார். சிறு வயதிலிருந்தே எமது பிள்ளைகளுக்கு கல்வியின் முக்கியத்துவத்தையும் சமய அனுட்டானங்களையும் உணர்த்தி வந்தார். விசேடமாக நைஜீரியாவில் வாழ்ந்த போதும் சரஸ்வதி பூஜை, நவராத்திரி போன்ற விழாக்களை வீட்டிலும் ஏனைய சைவ அன்பர்களோடு சேர்ந்தும் கொண்டாடினோம்.

குறிப்பாக தானே எழுதி, இயக்கி எமது பிள்ளைகளை நடிக்க வைத்து மார்க்கண்டேய சரித்திரத்தை வில்லுப்பாட்டு நிகழ்ச்சியாகவும், இராமாயணத்தில் இராமர் காட்டுக்குப் போகும் நிகழ்வை நாடகமாகவும் நைஜீரிய தமிழ்சங்கத்தில் மேடையேற்றினார். 2006ம் ஆண்டு கொடிய கான்சர் நோயினால் பீடிக்கப்பட்டு தனது மனவலிமையினால் சென்ற சுமார் 6 வருடங்களைக் கடந்து எம்மைவிட்டு பிரிந்துவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சபாபதி சிவசுப்பிரமணியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா நான் கண்ட தெய்வம்

அம்மா நான் கண்ட தெய்வம் எல்லோருக்குமே தாய்மார்கள் தெய்வம்தான். இருந்தாலும் அம்மா அரியாசனத்தில் அரசரோடு எம்மை சரியாசனம் வைத்த தாய் அம்மா தெய்வம் தான்.

இன்றைக்கும், என்றைக்கும் ஆசைப்பிள்ளை டீச்சர் உடைய மூத்த மகன் என்பது தான் எனக்கு பெரும் மகிழ்ச்சியையும், பெருமையையும் தருவது.

At amma's wake last month, I met a Karainagar Hindu College student of amma from 1968. He shared with me his memories from 44 years earlier. How she had not just been a teacher, but a close friend and even a close family member. How, she was not just very pleasant but quite a passionate teacher. It brought tears to my eyes.

Amma strongly believed in education as the key to breaking class, economic, social and gender barriers. She embraced generations of students with this conviction. She even reached out to students in Africa in her retirement. When amma teaches, she takes you under her wings. You just became family. You were simply her daughter or son. This I witnessed. She became your best advocate to succeed in life not just school. I understand what her former student was telling me. அம்மா தன் சகோதரனையும், கணவனையும், மகன் களையும் அல்லவா படிப்பித்தவர்.

Amma's neighbors in Montreal relate the story of amma in her sixties, in the winter bundled up, wearing her school back pack and going for French lessons. They thought it was funny to see teacher aunty that way. Amma not only preached that "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" but applied it in her life too. She instilled in me the lifelong pursuit of knowledge. More importantly she instilled compassion, empathy, humility and love. To always spread positivity.

இன்றைக்கும், என்றைக்கும் ஆசைப்பிள்ளை
டீச்சர் உடைய மூத்த மகன்

Dr. விசாகரன் (மகன்)

JD Candidate, December 2012
(UK Law) – I know amma will be
watching my graduation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Dear Amma

Amma - my hero, my inspiration, my role model - the girl from Chulipuram who believed her children were second to none, and strived so hard, against so many odds, to make us realize our potential. Amma, was the epitome of selfless love. Her patience with us was endless. The few times I come close to losing patience with my two adorable daughters I am reminded of how there wasn't a single moment she lost it with any of her three troublesome boys. Her courage, and positive attitude in the midst of great adversity was incredible. It was inspirational to see her keep this up to the last minute. I will never forget...

*My dear amma, you are not gone, you are alive in every cell of my body. There is never a moment I don't think of you. My every thought and action continues to be influenced by you. You make me want to be a better father, a better husband, a better brother, and a better human being overall. Your legacy is teaching me to live my life the way you did - with patience, love and generosity, coupled with great courage and strength. I hope I can live up to your standards...*

Kiruba, son.
Clifton Park, New York

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தகப்பனார் ஆசைப்பிள்ளையின் 60வது பிறந்தநாள் (1958) தாய் செல்லம்மாவுடன் சகோதரி வள்ளியம்மை, மூத்த சகோதரியின் மகன் அப்புத்துரை, தம்பி பொன்னையா, இலட்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விளையாட்டில் திறமை பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விளையாட்டு வீரர், வீராங்கனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமண நாள் ஒக்டோபர் 1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மேல்) கணவர் நைஜீரிய புறப்படும் நேரம்
(1979) தாய் தந்தையரும் குடும்பமும்
(கீழ்) குடும்பம் 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from Suthaharan

வெள்ளைத் தாமரையில் இருக்கும்
சரஸ்வதி தேவியை நான் காணவில்லை
ஆனால் சுளிபுரத்தில் அன்போடு ஆசைப்பிள்ளை
ரீச்சர் என்றும், நைஜீரியாவில் Mrs. Siva என்றும்
மதிப்போடு அழைக்கப்பெற்ற என் அம்மா தான்
நான் கண்ணால் கண்ட கலைவாணி

"If I give you 10 kobo every day you go to school for a week, how much money will you have after one week?" This is how Amma taught me to multiply in tens - a very simple and practical approach to learning. An approach she applied not only to her children, but as a mathematics teacher to all her students. She was very proud of us all, even at times embarrassing me, telling complete strangers that her youngest son had entered university when just 13 years old.

She firmly believed that everyone had potential and just needed some guidance. Amma literally asked 'give me your struggling, your tired, your weak students yearning to achieve' and would patiently engage them, motivate them individually and help them excel. Many of her students ended up being her close friends, drawn by an inexplicable reciprocal understanding of her. She was a very jovial person who loved to write, sing, dance, draw and paint, and because she lovingly taught these arts, she embodies to me Goddess Saraswathi.

Her memory was very sharp; she could remember the birth dates and birth stars of all the folks she met. Even in her late years, she had a bubbling personality. She was a very determined lady living in a body that turned against her with cancer. Her stay in the hospital was long and painful, but she found strength in different forms including reflection on the pain endured by Jesus.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Born in a village and educated far from home she enjoyed travelling the world, visiting four of the five continents. She loved to visit Australia, but cancer had by then made her body frail. She was well accomplished even before she was diagnosed with cancer, but the disease brought to light her inner strength, motivating everyone with her own battle. She was diagnosed in 2006 when she hadn't witnessed the birth of any grandchild and she was very sad about it. Similar to the Markandeya story (she had taught us the same to perform as a வில்லுப்பாட்டு during a Tamil Sangam event in Nigeria), she got protection from the Lord till her dreams came true. When she passed, all her children had married and had two lovely daughters each.

She will be fondly remembered for being a comfort in the midst of turmoil, for taking on the troubles of others as her own and for helping them realize that 'one day all will be well'. What I will remember most about her is her wish to live in dignity. Her family was important to her and she knew that she was very loved. With love she won over the world. She will be missed, and she will forever be loved by all who met her.

**Suthaharan**

Son,

San Francisco, California



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன்பிறந்த அக்கா (மணி), வள்ளியம்மை சுப்பிரமணியம் குடும்பம்
## சத்தியமலர், இரவிந்திரன், சத்தியகீர்த்தி சுசித்திரா

எல்லோரும் என்னைச் சிறுவயதில் 'மணி' என்று கூப்பிடுவதைப் பார்த்து நீங்கள் 'அணி' என்று அழைப்பீர்கள் தங்கச்சி! அப்படி ஒரு பாசம் பின்னிப் பிணைந்த அழைப்பு இந்த மானிடப் பிறப்பில் தானம்மா கிடைக்கும். பாடசாலை செல்கின்ற காலத்தில் உங்கள் மூன்று வயதிலேயே எனக்குப் பின்னாலே ஓடிவந்து படித்து எப்போதும் 1ம் பிள்ளையாகவே வருவீர்கள் செல்வமே!

எங்கள் குடும்பத்துடன் மாத்திரமல்ல; எனது கணவனின் முற்போக்குக் கொள்கைகள் யாவற்றிற்கும் மதிப்புக் கொடுத்து முன்னுரிமை வழங்குவீர்களம்மா! நான் வாழ்ந்த இடமெல்லாம் என்னைத் தேடி வந்தீர்கள். கண்டி, சிங்கப்பூர், இந்தியாவென உங்கள் பிள்ளைகளையும் உற்சாகமூட்டி அனுப்பி வைத்தீர்கள். அதுபோல என்னையும், தம்பியையும் 2006ல் அமெரிக்காவுக்கு அழைத்து கிருபாவின் திருமணத்தில் பங்குபற்ற வைத்தீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக எனது மூத்தமகன் இராசனைச் சிறியவயதில் உங்களுடனேயே வைத்திருந்து வளர்த்தீர்கள். "அவரது திடீர்மறைவு தான் என்னை இவ்வளவு நோயாளியாக்கியது" என்று கூறி அழுதீர்கள். அவரது நினைவு மலரை உங்களின் "பாசத்தின் குரல்" என்று பெயரிட்டு வெளியீடு செய்தீர்கள். அன்னாரது 1ம் வருட நினைவஞ்சலிக்குச் சிங்கப்பூருக்கு 2002 இல் வந்தீர்களம்மா. உங்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் மறக்கமுடியாதவைகள். உடம்புதான் அழிகிறது. உயிருக்கு அழிவு கிடையாது. எனது பேத்தி சுபாவும் உங்கள் நிகழ்வில் பங்குபற்றினார். உங்களைப்போலவே உங்கள் வாரிசுகளும் உங்கள் பாதச்சுவட்டினைப் பின்பற்றி வாழ் வார்களென்ற நம்பிக்கை இருக்கின்றது. 2009 இல் கீர்த்தி தனது மகனுடன் உங்களிடமும் உங்கள் பிள்ளைகள் வாழ்கின்ற நாட்டிற்கும் சென்றிருந்த காலங்களில் அவர்களே தங்கள் வாயினால் வாக்குறுதி கொடுத்துள்ளார்கள். நன்றியம்மா. நன்றாக வளர்த்திருக்கின்றீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்திக்கும் அத்தனை நல்லுள்ளங்களின் குரலுடன் எமது குரலும் சங்கமமாகட்டும்!

**சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன்பிறந்த தம்பி ஆசைப்பிள்ளை பொன்னையா குடும்பம் துணைவியார் திருமதி. சிவநாயகி, மகன்மார் சோமஸ்காந்தன், கிரிதரன்

'சின்னக்கா' என்ற உறவு என்றுமே அழியாத வகையில் எனது கல்விக்கு வழிகாட்டியவர்களில் நீங்களும் பெரும்பங்கு வகித்தீர்கள். அதேபோல உலகம் முழுவதும் பரந்துவாழும் அறிஞர் பெருமக்களுள் ஒரு குறிப்பிட்ட தொகையினர் உங்கள் மாணவர்களாகவே இருப்பர். உங்களின் அன்பையும், ஆதரவையும் உள்வாங்கிய பாசத்தினால் இரண்டு தடவைகள் அமெரிக்க நாட்டிற்கு வந்து உங்கள் குடும்பத்தைச் சந்தித்தேன். எனது மகன் சோமாசும் லண்டலிருந்து அடிக்கடி பல தடவைகளுக்கு மேலாக அமெரக்காவுக்கும், கனடாவுக்கும் ஓடியோடி வந்ததுடன் சின்னமாமியின் இறுதிக்கிரிகைக்கும் மொன்றியல் வந்து பங்குபற்றியமை எமக்கு மனநிறைவைத் தருகின்றது.

உங்களைப் போலவே, உங்களின் பிள்ளைகள் பிறந்தநாட்டின் பற்றையும் உறவினர்களின் தொடர்பையும் தொடர்வாகவென்ற நம்பிக்கையும் இருக்கின்றது. தங்களின் ஆத்மா என்றென்றைக்கும் எமக்கு ஆசீர்வாதம் வழங்கிக் கொண்டேயிருக்கும் என நம்புகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sridevi, daughter-in-law

Amma always wanted a daughter and I was lucky that God chose me to be the first of three daughters for amma (Sridevi, Meera, Vidya). Then God blessed her more with 6 granddaughters. She went from having only sons, to having nine women in her life. She loved all her children and grandchildren very much.

She was a teacher who had a lifelong love of learning. She explored a wide range of topics from numerology to healthy eating. In fact, she was using You Tube and FaceBook before many of the younger generation. She loved the arts and was herself an accomplished singer, dancer, and artist. She also inspired her family members to develop these skills, in addition to traditional book learning. Lastly, she believed in physical fitness and encouraged her family to play sports. In essence, she was a modern day Leonardo da Vinci.

Finally and most importantly she was a humanitarian who gave a helping hand and a kind word to everyone she met.

Amma's first daughter
Sridevi Visaharan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Vidya, daughter-in-law

Amma had the zest to live life fully. Her health did not deter her from being a part of so many occasions in our lives- big or small, like 'valaikappu', Priya's and Shreya's birthdays, 'ear piercing', 'mottai', Diwali, Christmas... the list is endless. She enjoyed being with her grandchildren and taught them tamil songs, told them numerous stories without getting tired when Priya would say "one more". Even when she was very sick and couldn't get up, she would lay down in bed and make "caterpillars" for Priya and Shreya and tell them stories. I could see what a wonderful teacher she must have been when she taught Priya little things in a fun and interesting way.

Her thoughtfulness always touched me. When I came to Kiruba's house after we got married, the bachelor pad looked like home and the kitchen was well stocked with all kinds of utensils and things to cook with, thanks to Amma. She made me feel like I was a daughter to her. This love was reflected in her everyday actions. When Kiruba was away in Germany, and I stayed with her in Montreal, even though she wasn't well, she and Appa took me to an Indian restaurant because she knew I liked Indian food. Another small incident that is still vivid in my mind is once when we were in Albany, I was once not able to make tea (with loose tea) because I didn't have a tea strainer. Weeks later, when we reached Montreal, she gave me her new tea strainer to put in my bag. Though a little thing, she remembered that I didn't have one and didn't mind giving me hers.

She was multi-talented. I got a glimpse of few of her talents even in the years when she was sick- sewing 'pattu pavadai' for Priya and Prema, making bead necklaces, drawing and painting beautiful landscapes and flowers, and singing. She was very

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

friendly and could make friends anywhere. Her warm personality attracted even strangers to confide in her. Even though I was her daughter-in-law, I could talk to her like a friend. Our conversations helped me learn and understand Sri Lankan Tamil better.

Her resilience amazed me. Every time her cancer marker went up, she would be upset just for a little while. Then her attitude to not give up would resurface and we would see her being her normal cheerful self trying to make the best of the time she had.

She was very independent. Once she was in the hospital for almost 3 weeks and in a lot of pain. When we went to see her after she got back home, I was amazed to see her in the kitchen making something for herself. She inspired me to take care of my body and health. She ate healthy food without worrying about how it tasted and diligently did some kind of exercise every day even with her battered, frail body.

I have learned a lot from her in these years. I will always remember her as a person with great strength, positive attitude, immense patience and generosity.

Vidya
daughter-in-law

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Aunty, Bravest Warrior

Bravery is not always a big man facing a bigger enemy from far away.
Bravery is a small woman facing a smaller enemy inside her own body.

Victory is not only achieved by winning all the important battles.
Victory comes from living each day to completion.

Fellowship is not always nurtured by distributing gifts to others.
Fellowship comes from keeping hope when there is none.


Courage is not only shown by soldiers ready to die.
Courage is a woman in a hospital bed determined to live.


Death does not mean you are nowhere.
Death has freed your spirit to live everywhere.

Dear Aunty. You are the bravest warrior I know. I love you.

Meera Suthaharan
daughter-in-law

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வீட்டுச் சுற்றாடலை அழகுபடுத்த நைஜீரியாவில் பூந்தோட்டம்.
பிள்ளைகளுடன் விளையாட்டில் ஊக்குவிக்க பட்மின்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









நைஜீரியாவில் கணவர் பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









பிள்ளைகளின் திருமணங்கள் - விசாகரன் நவம்பர் 2003
- சுதாகரன் யூலை 2006 - கிருபாகரன் நவம்பர் 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org









பேரப்பிள்ளைகளுடன் குதூகலம் வலதுமேல் படத்தில் (இடமிருந்து)
லலிதா, லஷ்மி, பிரேமா, பிரியா, சுகானா, சிரேயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பு அன்ரி

சின்னஞ்ச் சிறுவயதிலிருந்து உறவு என்று நீ தான் இருந்தாய்
அறிவு சொல்லவும், அன்பு காட்டவும் மற்றதொரு தாயானாய்
இன்னல்களும் , இடைஞ்சல்களும் வந்த போதெல்லாம் துணிவு சொன்னாய்
நான் நானாய் வாழ்வதற்கும்,நல்லது செய்வதற்கும் – உதாரணமும் நீயானாய்
நீண்ட கூந்தல் அசைந்தாட நீ செல்லுமஅழகு இன்றும் தெரிகிறது,
அழகிய மனைவி –நீ
அறிவுடன்,அன்பும் சொன்ன ஆசிரியர் – நீ
பூமியில் வியத்தகு குழந்தைகளின் தாய் –நீ
நண்பர்களின் உண்மைத் தோழி –நீ
உறவினருக்கு ராணி –நீ
பாசத்தைக் காட்டிய பாட்டி –நீ
எடுக்காத வடிவம் இல்லை இசைக்காத பாடல் இல்லை.
காலச் சூழலுக்கு உன்னை மாற்றிக்கொண்டு வாழ்ந்த கணனித் திருமகள்
அன்பு சொன்ன அப்பாவையும், அண்ணாவையும் இழந்த நிலையில்
நீயும் மறைந்து போனாய்.
என் பலத்தில் –பாதி தொலைத்து சோர்ந்து விழுகிறேன்.
புலமைபரிசில் சித்தி யடைந்ததை நீ சொல்லி மகிழாத ஆசிரியர் இல்லை.
ஓட்டட் போட்டியில் முதலாவதாக வந்தால் குளுகோஸ் ஐ முதலில் நீட்டுவது
நீதான்
விடுதியில் வாடிய காலங்களில் உணவு சமைத்து ஓடி வருவாய்
திரைப்படங்களும், நூல் வாசிப்புகளும் உன்னால் தான் எனக்கு அறிமுகம்
என்னையும் நேசித்து ,என் குழந்தைகளையும் நேசித்தாய்
எதைச் சொல்லி ஆற ,எதை நினைத்து அழ
உனது விம்பம் என்னில் விழுந்து தான் நான் வளர்ந்தேன்.
அருகிருந்தும் ஓடி வர முடியவில்லை அடங்கவில்லை அழுகை ,
அன்டி!
உன் அன்பும், பலமுமே விட்டுச் சென்றாய்
அவற்றுடன் வாழ்வோம் –

மகள் –பபி
**Colombo, Sri Lanka**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அக்காமகன் சி. அப்புத்துரை (C.T.B) குடும்பம்.**
**(திருமதி. இராஜேஸ்வரி, திரு. சிவரஞ்சன், திரு. பரமேஸ்வரன், திரு. ஜெயரஞ்சன், ஸ்ரீரஞ்சினி, ஜனாரஞ்சனி)**

அன்ரி! என்னைவிட வயதில் நீங்கள் இளையவராக இருந்தாலும் தாய்போலவே அன்பையும், ஆதரவையும் நல்கினீர்கள். நைஜீரியாவில் நீண்டகாலம் வாழ்ந்த தாங்கள் 1997இல் கண்டிக்கு வந்தீர்கள். அதன்பின்னர் கனடாவிலிருந்து 2005லும், 2010லும் பிள்ளைகளுடன் வந்தீர்கள். கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள எமது இல்லத்தில் தங்கி எமக்கு மனநிறைவையும், வாழ்த்தையும் வழங்கினீர்கள். அந்த வேளைகளில் என்னைப்பெற்ற அம்மாவே என்னைத் தேடி வந்து எனது குடும்பத்துடன் ஒன்றிணைந்து விரும்பிய உணவுகளை அருந்தி எம்மை ஊக்குவித்து உற்சாகப்படுத்தினீர்கள். உங்களைப் போலவே உங்கள் வாரிசுகளும் எமது பாசத்தையும், உறவையும் பேணிக் காப்பார்களென்ற நம்பிக்கையும் இருக்கின்றது. தங்களின் ஆத்மா சாந்தியடைய எமது அயலிலுள்ள "விசா விநாயகரை" பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மச்சாள்மார்களான : திரு. சபா சிவசுப்பிரமணியம் அவர்களின் சகோதரிகள் திருமதி. நவமணி உலகநாதன், தனபாக்கியம் மகாலிங்கம், செல்வமணி ஜெயராஜா, குமுதினி + கருணாதேவி**

எங்கள் சகோதரம் நைஜீரியாவில் வாழ்ந்த போதும் கனடாவில் வாழ்ந்த போதும் அவரது நிழல்போலவே இணை பிரியாமல் வாழ்ந்தீர்கள். இப்போது துணையை இழந்து அவர் தனிமையில் இருக்கின்றார்; என்பது தான் எமது துயரமாகும். நாங்களோ பிறந்த மண்ணில் அவரது பிள்ளைகளோ தொழில் நிமித்தம் அயல்நாட்டில் இவை யாவும் தவிக்க முடியாதவை.

இறந்த ஆத்மாவுக்குச் சாந்தியும், எங்கள் சகோதரத்துக்கு மனஆறுதலும் வேண்டி எல்லாவல்ல ஸ்ரீபத்திரகாளித் தாயைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரியமாமா அமரர் கனகசபை குடும்பம்**

திரு. வரதராஜா, திரு. கந்தசாமி, திரு. சிவபாலசிங்கம், திரு. நாகேந்திரம், ராணி மச்சாள் ! நீங்கள் 2005ம் ஆண்டு கனடாவிலிருந்து நாட்டிற்கு வந்திருந்தீர்கள். அப்போ நீங்கள் பிறந்த ஊரான அரியாலைக்கு வந்து மதிய உணவும் உண்டு உறவினர்களுடன் உறவாடிச் சென்றீர்கள். அதன்பின்னர் 2010ல் வந்து வெள்ளவத்தையில் தங்கியிருந்தீர்கள். நாங்கள் அனைவரும் உங்களை வந்து பார்த்தோம். தாய்வழி உறவாகிய எங்களைச் சந்தித்து உங்கள் அன்பைப் பரிமாறிக் கொண்டீர்கள். எங்கள் பிள்ளைகளும் உங்கள் அன்பை மறக்கமாட்டார்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய எமது ஞானவைரவர் பாதத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சின்னமாமா திரு. இ. கார்த்திகேசு குடும்பம்**

(அரியாலை, லண்டன், ஹொலண்ட், கமலா, ஸ்ரீ, மணி, துஷி)

ராணி மச்சாள்! நீங்கள் 2005ம் ஆண்டு உங்கள் பிள்ளைகளுடன் இங்கு வந்திருந்த போது இதுதான் நாங்கள் எல்லோரும் பிறந்த "அம்மாச்சிவீடு" என்று சொல்லி எங்களை ஆனந்தப்படுத்தினீர்கள். (அதுபோல உங்கள் அக்கா மணி மச்சாளும் வந்து தான் பிறந்த மண் என்று கூறி எமது வீட்டில் விழுந்து வணங்கியது எமக்குப் பெரிய ஆச்சரியமே!) உங்கள் ஆலோசனைப்படி எமது பிள்ளைகள் உயர்கல்வி கற்று வாழ்வின் மிக உயர்ந்த நிலையில் இருக்கின்றார்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எமது ஞானவைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. பாலச்சந்திரன் (சின்னத்தம்பி) அவர்கள் :**
**(தாயார் மகேஸ்வரி உட்பட)**

அன்ரி! நீங்கள் எங்கிருந்தாலும் சுகபலத்துடன் வாழவேண்டுமென்று எமது குல தெய்வமாகிய ஸ்ரீபத்திரகாளி அம்பாளுக்கு வேண்டுதல் செய்து அடிக்கடி அர்ச்சனைப் பிரசாதத்தைத் தபாலில் உங்களுக்கு அனுப்பி வைப்பேன். உங்கள் நவராத்திரி, திருவெம்பாவைப் பூசைகளை எமக்கு ஊடாகச் செய்விப்பீர்கள். உங்கள் சிந்தையும், செயலும் பிறந்த ஊரைச் சுற்றி இருந்தது போல உங்கள் பிள்ளைகளும் தாங்கள் பிறந்த, வளர்ந்த, வீட்டையும், கிராமத்தையும், நாட்டையும் மறவாது இடைக்கிடை வந்து உறவினர்களுடன் உறவாடிச் செல்ல எமது குலதெய்வம் அருள்மிகு பத்திரகாளி அம்பாளின் திருவருளை மன்றாடுகின்றேன். அன்ரியின் ஆத்மா சாந்தியடைவதாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி. ஞானாம்பிகை மகேஸ்வரன் (சின்ன ரீச்சர்) குடும்பம்
(கார்த்திகா நிருத்திகா)

அன்ரி! நீங்கள் 2005ம் ஆண்டு மேமாதம் உங்கள் பிள்ளைகளுடன் பிறந்த நாட்டிற்கு (1983-2005) 22 வருடங்களின் பின்னர் சுளிபுரம் வந்தீர்கள். எங்கள் வீட்டில் தான் தங்கினீர்கள். பின்னர் 2010ம் ஆண்டு கொழும்புக்கு வந்து அண்ணா வீட்டில் தங்கியிருந்தீர்கள். நானும், பிள்ளைகளும் இங்கிருந்து கொழும்புக் கு வந்து உங்களைச் சந்தித்தோம். உங்கள் அன்பிலும், அரவணைப்பிலும் எந்தவிதமான குறைபாடுகளும் இருக்கவேயில்லை. இன்னும் நீண்டகாலம் வாழ்ந்து எமக்கெல்லாம் நல்வழிகாட்டியாகத் திகழ நாம் கொடுத்து வைக்கவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from in-law

Laxmi was like a sister to me following the marriage of my daughter Meera to her youngest son Sutha. During this time I learned to love, respect and admire her and we had a great time sharing ideas and past experiences.

On her first visit to our house, while we were relaxing in the basement, someone asked her to sing a song. To our amazement, she cleared her throat and sang "Thillai ambala nadaraja" and left us in awe at the ease with which she sang it. Her voice and the song still lives with us.

On the day after the registration, Laxmi came over to Meera and said "Meera, I want a little baby girl." I did not expect that from her, as I was always hoping for a baby boy. Anyway, Meera didn't respond at all, so we dropped it. As it happened, she not only had her first grand daughter soon after, but a succession of grand daughters, totaling six.

It was a great shock to all of us, when we found out that she had cancer. Throughout her illness, she never showed any sign of weakness and it was her strength and determination that carried her through the illness.

She lived a great life as a wife, a mother of three wonderful children and a grandmother of six beautiful, adorable girls. We will miss her for all that she has been to us.

May her soul be with God and guide us!

Sarojini Thillainatesan
Toronto, Canada

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரியமான தோழிக்கு

நாம் விடும் ஒரு சொட்டு கண்ணீருக்கும் கூட அர்த்தம் இருக்கு மென்றால் அது நம் நண்பர்களுக்கு விடும் கண்ணீர் மட்டும் தான்.

தாயகத்தின் தந்தை வழி உறவு என்று அறிமுகப்படுத்தினார்கள். ஆனால் அயலிருந்து அளவளாவி அறிமுகமானதில்லை. இனிய உற வுகளை விட்டு ஏதிலிகளாக இடம்பெயர்ந்து புலம்பெயர் தேசத்தில் சந்திக்க வைத்தது இறைவன் சித்தம். சொந்தங்களைக் காண்பதில் சொல்லொணா மகிழ்ச்சி கொண்டீர்கள். தொலை தூரத்தில் இருந்து தொலைபேசியில் உரையாடும் போது உங்கள் பிரியத்தை உணர்ந்தோம். சந்தித்த வேளைகளிலும் சந்தோஷமான உரையாடல்களுடன் மகிழ்வடைந்தோம். மலையைப்போல் உயர்ந்து நின்று, மழையைப் போல் மகிழ்ச்சி தந்து, நட்புக்கு நம்பிக்கை என்னும் உயிர் தந்து, இனிய தோழியாக இருந்தீர்கள். கண்ணுக்குள் நிலவைப்போல். கண்ணீரில் துளியைப் போல் கலந்து பேசிய நட்புப் பாலம் இன்று காகிதத்தில் கதையாகிப் போனதுவே.

இன்பத்தில் நிறைவாக, துன்பத்தில் துணிவாக வாழ்ந்து பெருமை தரும் மக்கட் செல்வங்களைப் பெற்று பேரானந்த எல்லையை அடைந்தீர்கள்.

"சாதனைகள் அல்ல சாதிக்க நினைக்கின்ற முயற்சிகளே முக்கியமானவை" என்பதற்கு சான்று.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்" என வள்ளுவன் கண்ட தாயாக

வாழ்ந்து, மைந்தர்கள் மூவரையும் கல்விமான்கள் ஆக்கியதோடு மட்டுமல்ல, ஒழுக்க சீலர்களாகவும் வளர்த்து அவர்களுக்க சற்றும் குறையாத வண்ணம் அழகும், அறிவும் நிறைந்த மருமகள்மாரையும் பெற்று மகிழ்ந்தீர்கள். "விதிவலிது" என்பது போல் பொல்லா நோயொன்று சொல்லாமல் கொள்ளாமல் உடலில் குடிபுகுந்தது. ஆனாலும் திடமனதோடு அதை ஏற்றுக் கொண்டு வாழ்ந்தீர்கள்.

மரணத்தைக் கண்டு பயப்படாத துணிவு உங்களது. பயப்படுவதால் மரணம் நம்மை விட்டுவிடுமா? மரணத்துக்கு துணிவிருந்தால் வந்து என்னை எடுத்துக் கொள்ளட்டும் என்று வாழ்ந்து வாழ்க்கையை ரசித்தீர்கள். மரணம் என்பது வாழ்வின் முடிவல்ல. செய்த சாதனைகளுக்கு இயற்கை தரும் ஓய்வு என்பற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிமாளா வலியுடன், தாங்க முடியா வேதனையின் உச்சத்தைக் கடைசிவரை சகித்துக் கொண்டு கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்களோடும் மனமகிழ்ச்சியோடு வாழ உங்களால் மட்டும் தான் முடியும். எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி குடும்பத்தார்க்கும், உறவுகளுக்கும் மகிழும் வேளையில் ஆதரவாகவும், துன்ப நேரத்தில் ஆறுதலாகவும் இருந்தீர்கள்.

நோயுற்ற வேளையில், கடலாய் பேசிடும் வார்த்தைகள் யாவும் துளித் துளியாக் குறைய மௌனமாகப் பேசிடும் மொழிகள் உங்கள் மனப்பாரம் சொல்லிநிற்க, எல்லோரிடமும் குறையாத அன்பு கொண்டு பரிவுகாட்டி நின்றீர்கள். வருடங்கள் கடந்து புதுவசந்தங்கள் தொடர்ந்து வருவது போலவாழ்க்கையின் உறவுகள் பிரிந்தபோதும் புது வடிவத்தில் மலரும் உறவுகள் வந்துசேரும். பெருகும் கடலென நிற்கு ம் உறவுகளில் ஒரு உறவை மட்டுமல்ல, பிரியமிகு ஒரு தோழியாக என் நினைவுகளில் என்றும் மிதந்துகொண்டிருக்கும் உங்கள் அன்பு முகம்.

கண்களைக் கண்ணீரில் நனைக்காமல் வாழ்க்கையை கடந்தவர்கள் யாரும் இல்லை. ஆனாலும் இனி எம்மோடு பார்க்கும் விழியாய், சுவாசிக்கும் மூச்சாய், பேசும் வார்த்தையாய், உறக்கத்தில் கனவாய், நினைவில் உயிராய், நடக்கும் போது நிழலாய், காலமெல்லாம் தோழமையோடு வாழ்வீர்கள்.

பிரியமுள்ள தோழி
**மகாலெஷ்மி லெட்சுமணசாமி**
(ரொரன்டோ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மைத்துனர் : குமரேசு பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர்)**
**குடும்பம் : (சுதாகரன், அருள்மொழி ....)**

எங்கள் குலதெய்வமாகிய அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் அயலில் வாழும் குடும்பங்களில் பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விசேட பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட கணித ஆசிரியராக திருமதி. அவர்கள் விளங்கினார்கள்.

மற்றவர்களுடன் பேசும்போது சிரித்த முகத்துடனும், திறந்த மனதுடனும் தனது கருத்துக்களை முன் வைப்பார். பிரபலமான மூன்று கல்லூரிகளிலும் அன்னார் ஆற்றிய பணியை மாணவர்களின் பெற்றோர் கூறக்கேட்டு எமக்கும் அது முன்மாதிரியாகவும், பெருமை யாகவும் இருந்தது. அவர்தான் பிறந்த மண்ணுக்கு இருபது ஆண்டுகள் மாத்திரமே சேவையாற்றினாலும் அது ஒரு பெரிய சமூகத்தை (கணித ஆசிரிய வாரிசுகளை) உருவாக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் பாதாரவிந்தத்தை இறைஞ்சிகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ரீன் ஆசைப்பிள்ளை ரீச்சர் அதாவது கணித ஆசிரியை இலட்சுமிப் பிள்ளை அவர்களிடம் அரசினர் விக்ரோறியாக் கல்லூரியில் கணித பாடத்தைக் கற்ற மாணவராகிய திரு. வே. நல்லைநாதன் அவர்கள்.

ரீச்சரிடம் Maths படித்தவர்கள் அநேகர். அவர்களில் பெரும்பான்மையோர் பொறியியலாளர்களாகவும், டாக்டர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் உலகிலுள்ள ஐந்து கண்டங்களிலும் உயர்பதவிகளை வகிக்கின்றார்கள். மானிடன் ஒருதடவைதான் பூமியில் பிறக்க முடியும். அந்தப் பிறப்பின் பயனை முன்னுணர்த்தி மற்றவர்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாக இருளகற்றும் ஒளித்தீபமாகவும் வாழ்வது குறிப்பிட்ட ஒருசிலருக்குத்தான் கிடைக்கின்றது. ரீச்சரின் நீங்காத நினைவுகளுடன் அவரது இல்லத்தில் 03.06.2012 நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியிலும் பங்குபற்ற எமக்குக் கிடைத்ததையிட்டு மனநிறைவு எய்துகின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











இலங்கை பயணம் 2005 கணவரின் இளைய சகோதரி செல்வமணி, கணவரின் சகோதரி தனலட்சுமியுடன் மகன் காந்தன், தாயின் சகோதரரின் மகன் சின்னராசாவின் குடும்பம், மூத்தக்காவின் மகள் கனகாம்பிகையும் கணவரும், மூத்தக்காவின் மகன் அப்புத்துரையின் குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காமகள் சத்தியமலர் குடும்பத்துடன் அக்காவின் மூத்த மகன் சத்தியராஜன், அக்காவுடனும் தம்பியுடனும், மகள், அக்காவின் மகன் ராசன் மற்றும் பேரன் சுமன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









கனடாவில் கணவரின் உறவினர் மகாலட்சுமி, சங்கீதா, ஜனனி லோகன்,
மாணவி சுஜி, உறவினர் சுமதி; பேபி அன்ரி குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கப்பூர் / மலேசியா சுற்றுலா
சகோதரியும் பேத்தியும்; கௌரியும்
தம்பியும்; சகோதரி மகன் குடும்பம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பிக்கும் முறையை கற்றுக்கொண்டோம்

உங்களிடம் படிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. ஆனால் எனது நண்பர்கள் உங்களிடம் படித்து இருந்தார்கள். அவர்களில் பலர் தாங்கள் பெற்றுக்கொண்ட கல்வியால், இன்று நிறைய சேவைகள் செய்கிறார்கள் என்றால் அதற்கு நீங்கள் தான் அடிப்படைக் காரணம் என்று சொல்வார்கள். நான் தேடிப்படிக்கும் அறிவை எனக்குள் வளர்த்தது சுழிபுரம் விக்டோரியா கல்லூரி தான். அதிலும் உங்கள் சக ஆசிரியர் செல்வி. இராசரத்தினம் தான் முதன்மையானவர். நீங்களும் அவரும் தான் எம் பாடசாலையின் பெருந்தூண்களாக இருந்தீர்கள். அதிலும் கணித பாடம் என்றாலே பயந்த மாணவர்களை தெளிய வைத்து அதிக தேர்வுச்சித்தியை ஏற்படுத்தினீர்கள். பின்னர் மிக நெருங்கி அன்போடும், ஆசையோடும், உரிமையோடும் கூப்பிடும் உறவாக இருந்தீர்கள். இறுதியாக உங்கள் பிறந்தநாள் அன்று என் உடல் நலத்தைப் பற்றியே அதிகம் கவலைப் பட்டு பேசினீர்கள். உங்கள் அன்பான வார்த்தைகள் எனக்குப் புதிய பலத்தைத் தந்தது. மாணவர்களுக்கான கல்வியை வகுப்பறையில் எப்படி எடுக்க வேண்டும், மாணவர்களுடன் சக நண்பனைப் போல பழகவேண்டும் என்ற முறையை உங்களைப் பார்த்து நான் கற்றுக் கொண்டேன். உங்கள் இழப்பு ஈடு செய்யமுடியாதது. நீங்கள் சொல்லிக் கொடுத்த கல்வியும், கற்பித்தல் முறையும் என்றும் வாழும்

**ந. இரவீந்திரன்**
(உப பீடாதிபதி கல்வியியல் கல்லூரி,
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆசை" விளக்கொன்று அணைந்ததுவோ

"ஆசை" விளக்கொன்று அணைந்ததுவோ அந்நாளில்
ஆசானாய் வீற்றிருந்த அம்மா நீர் அகன்றீரோ
சுழிபுரத்து மண்ணில் ஓர் சுந்தரியாய் வலம் வந்தீர்
சுற்றத்தார் நண்பிகள் பழகுதற்காய் ஏங்கி நிற்க

உலகம் உங்களை அண்ணாந்து பார்த்து
அழைத்தது ரீச்சர் என்று
உறவுகள் நாங்கள் அன்போடு பார்த்தோம்
அசந்தோம் உங்கள் ஆற்றல் கண்டு

பத்திரகாளி அன்னையின் பார்வையில் உங்கள் வளர்ச்சி
பக்குவமாய் நகர்ந்தது இளமையின் மலர்ச்சி
கல்வியில் நாட்டம் கருணை மிகு தேட்டம்
கையில் கிட்டியது கவலையில்லா வாழ்வோட்டம்

உயிர்ப் பொருளாய் வசந்தத்தின் கருப் பொருளாய்
ஒப்பற்ற செல்வமுடன் உயர்வு பெற்றீர்
விதைத்த விதை பயிராக விளைநிலமும் களமாக
ஓங்கி வளர்ந்திருந்த உயர மரம் நீங்களன்றோ

பெற்றவர்கள் பார்த்திருக்க பெருமையுடன் பிறந்த மண்ணில்
கற்றவர்கள் போற்றும் கனிவான ஆசானாய்
உற்றவர்கள் மகிந்திருக்க ஒருபோதும் வீழாமல்
உலகெங்கும் பறந்தீர் உச்சத்து உவகையுற்றீர்

நற் கணவர் கை பிடித்து நாளெல்லாம் மகிழ்ந்திருந்து
மற்றவர்கள் போற்றும் பேறு பெற்றீர் மாண்புடனே
பெற்ற மைந்தர் வளர்ந்து பெரும் வெற்றிகளைக் குவிக்க
பேருவகை கொண்டீர்கள் பொறுமையுடன் நடந்தீர்கள்

மலர்ந்த முகத்துடனும் மாறாத குணத்துடனும்
நலன் சூழ்ந்த வாழ்வை அனுபவித்து வருகையிலே
கலந்தது கொடிய நோய் கள்ளமில்லா உடலோடு
கரைந்தது உடல் மெதுவாய் காலன் வரும் வரையும்

அன்று நாம் காவிச் சென்ற உடலும்
காலன் கவர்ந்து சென்ற உயிரும் போக
எஞ்சி இருப்பது இவ்வுலகில் நீங்கள் சாதித்தவைதான்
இவையே போதும் உங்கள் இருப்பை பாதுகாக்க

எண்ணச் சிறகுகளை எவர் வெட்டிப்போட்டாலும்
மண்ணில் நடந்ததெல்லாம் மனதில் வட்டமிடும்
வண்ணத்து பூச்சியாய் வாழ்வில் வட்டமிட்டீர்
விண்ணிலும் நீங்கள் வெளிச்சமாய் வாழ்வீர்கள்

உறவுகளின் சார்பில்
ஆர். என். லோகேந்திரலிங்கம்

(Toronto)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Wonderful Chinnapaaty

Though I have not spent all that much time with Chinnapaaty, she has greatly influenced me in reaching the place I am in right now.

My mother influenced most of my opinion on Chinnapaaty, I had such a high opinion of her even before I met her. Amma had always looked at Chinnapaaty as her role model. When we had to move to India and start our lives new without having much help, Amma was able to stay strong all through as she could draw reference to Chinnapaaty's life in Nigeria. Amma was determined to give us the best education possible, just like how Chinnapaaty did.

Every time I met Chinnapaaty she would always encourage me to study hard and reach big heights. In a way she made me realize the importance of education, even during her last days through email she continued encouraging me. She has never forgotten to wish me on my birthdays and on all the special occasions.

I know she loved me fondly even before I was born; she was the first one to send many dresses for me along with Haran mama's bangle. She was one of the main reason to hold all our families together so tight. Chinnapaaty has lived a complete and a happy life. She has set the standard so high for a successful mother, making it so hard for us to make our mother reach that height.

You were a wonderful woman Chinnapaaty and I am so happy to be your family and having had a chance to spend time with you. We will always love you. Rest in peace.
With lots of love your grand daughter,

Subha,
Pennsylvania, USA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமலர் எங்கள் அக்கா

மாதவம் செய்தோரே மாதராய்ப் பிறப்பர்
ஆதலால் பிறந்தார் ஆசைப்பிள்ளை செல்லம்மா
அருந்தவப்புதல்வியாக
ஓதாமல் ஒருநாளும் இருக்காமல்
நாதமிசை வேதவல்ல கலைமகளின் அருளினாலே
போதிக்கும் பாடநூல் ஆசிரியை பயிற்சி பெற்றாள்
மாதரசி இலட்சுமிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

வீட்டிற் கருகே விக்டோரியா மகாராணி கல்லூரி
நாட்டிற்குப் பெருமை சேர்த்த நன்மாணாக்கர் பயிற்சிக் கூட்டம்
ஏட்டக்கல்வி எழுத்தறிவு எண்ணெழுத்து
பாட்டெழுதல் பகுத்தறிவு பாசமுடன்
படிப்பித்த பாசமுள்ள கல்வித்தாய் புகழ்வாழ்க!

'கற்கை நன்றே; கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்றுரைத்த

கன்னித் தமிழ் பழம்பாட்டி
அவ்வைத் தமிழ் அறிவுரையை
எல்லோரும் இந்நாட்டில்
கற்றுணர்ந்து வாழ்வதற்கும்
சோர்வின்றி உழைப்பதற்கும்
சுகதுக்க நிகழ்வுகளில் ஆற்றுரைகள் சொல்லியதும்
இகவாழ்வில் என்னையொரு மனிதனாக
படம்போட்ட புவியரசி தாள் பணிந்து போற்றுகின்றோம்.

எண்ணெழுத்து அறியவைத்த தாயாக - உயர்ந்த மகள்
பண்ணிசைத்துப் பரம்பொருளை பாடித் - துதித்த மகள்
கண்ணிறைந்த கணவனுடன் இல்லறத்தில் - திளைத்த மகள்
அன்புநிறை ஆண்மகவு மூவருடன்
அகமகிழ்ந்து தாயாக சிறந்த மகள்!
மண்பிரிந்து விண்ணிலுறை தேவருடன்
வீடுபேறு பெற்ற மகள் புகழ் வாழ்க!
மொன்றியல் மூத்தோர் இணையத்தின் முத்தமிழ்ப் பெண்ணரசி
முதுதமிழ்ச் சோதரரை முகமலர்ந்து - ஆதரித்த அன்பரசி
பார்த்தவுடன் பண்புடனே பாசமழை பொழிந்த தமிழரசி
'சாதல் இனிது' என்ற கவி பாரதியின் சாட்சியென
சங்கரனார் திருவடி நிழலிலே சாந்திபெற்றார்!

**வணக்கத்துடன் : வேலாயுதம் குடும்பம், மொன்றியால், கனடா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானறிந்த லட்சுமிப்பிள்ளை

லட்சுமிப்பிள்ளை மாணவியாக வேலணை மத்திய கல்லூரியில் இருந்த சமயம் நான் அவரின் ஆசிரியையாகவிருந்து அவரைப் பற்றி நன்கு அறிந்திருந்தேன். அவரிடம் ஒரு நல்ல மாணவிக்குரிய சகல நற் பண்புகளும் இருந்தன. படிப்பில் ஆர்வம், மற்ற மாணவர்களுடன் பழகும் விதத்தில் சீலம், ஆசிரியர்களை மதிப்பதில் பெரும் அக்கறை. இவற்றையெல்லாம் சுருங்கக் கூறின், லட்சுமிப்பிள்ளையிடம் நான் கண்ட அன்பும், பண்பும், ஆர்வமும், ஊக்கமும், எந்நேரமும் உள்ளதை உள்ளபடி சொல்லும் குணமும் அவரை அலங்கரித்த அணிகலன்கள். இறுதி வரை இக் குணங்கள் சற்றும் மாறாது வளர்ந்து கொண்டே வந்தன.

ஏறத்தாள பதினைந்து வருடங்களுக்குப் பின் லட்சுமிப்பிள்ளையை 1970-80களில் நைஜீரியாவில் நானும் என் குடும்பத்தினரும் சந்திக்க நேர்ந்த போதும் அதே விதமாகவே இருந்தார். அன்பாக "ரீச்சர் எப்படி இருக்கிறீர்கள்" என்பார். வீட்டிற்குப் போனால் அறுசுவை விருந்தளித்தே விடுவார். அவரும் அவரது கணவர் சிவசுப்பிரமணியமும் மற்றோரை மகிழ்விப்பதிலும், விருந்துபசாரம் செய்வதிலும் சிறந்த ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்தனர் எனலாம்.

மீண்டும் 2006ம் ஆண்டு மொன்றியல் நகரில் இத்தம்பதியினரைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுதும் அறுசுவை உணவுடன் என்னை உபசரித்தார் லட்சுமிப்பிள்ளை. எதற்காக மொன்றியல் சென்றேனோ அதனை முறையே முடிப்பதற்கும் உதவி செய்தார். அச்சமயம் தன் அன்பில் என்னை முழுக்காட்டி எடுத்ததுடன், "ரீச்சர், ரீச்சர்" என ஆயிரம் தடவைகள் சொல்லியிருப்பார். களங்கமில்லா மனம் லட்சுமிப்பிள்ளையின் ஒரு பாரிய முத்திரை.

ஒரு சிறந்த மாணவியாக நான் முதலில் கண்ட இவர் பல வருடங்களின் பின் ஒரு அருமை அம்மாவாகவும், குடும்பத்தைக் கட்டிக் காக்கும் மனைவியாகவும், பலரும் விரும்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பியுமாய் வாழ்ந்து இடையில் ஏற்பட்ட கொடு நோயைத் தன்னால் இயன்ற மட்டும் எதிர்த்துப் போராடினார். தன் பிள்ளை வைத்தியர், அதுவும் அவரது நோய் சார்ந்த வைத்தியர் என்பதனாலோ என்னவோ நோயினால் பீடிக்கப்பட்டிருந்த காலத்தில் எந்த விதப் பயமுமின்றித் தனது நோயைப் பற்றியும் அது எவ்வளவு தன்னைத் தாக்கியுள்ளது என்றெல்லாம் கணணிக் கடித மூலம் அறியத் தருவார். அதனைக் கண்டு நான் ஆச்சரியப் பட்டதுண்டு.

அவருக்கு இறைவன் கொடுத்த வரப்பிரசாதம் அஞ்சாமை, வாழ வேண்டுமென்ற தன்னம்பிக்கை, பல வருடங்களாகக் காலனை அண்ட விடாமல் வைத்திருந்த மனத்தைரியம். இதனை நோக்குமிடத்து லட்சுமிப்பிள்ளையின் வாழ்க்கை பலரும் பார்த்து அதிசயிக்க வேண்டியதொன்று. அவரை நினைக்கும் பொழுது அப்பர் தேவாரம் ஒன்று முன்னிற்கின்றது:

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் நரகத்தில்
இடர்ப் படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம் இன்பமே
எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரன் நற்சங்க
வெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய் மலர்ச்
சேவடி யிணையே குறுகினோமே.

"பிணியறியோம்" என்ற சொற்றொடர் இங்கு கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டியதொன்று. லட்சுமிப்பிள்ளைக்குப் பிணி வந்த போதும் அதனால் ஏற்பட்ட துன்பத்தையும் நோவையும் தூரத் தள்ளி விட்டுத் தன் வாழ்க்கையை இயன்ற மட்டில் இன்பமயமாக வைத்திருக்கவே பாடுபட்டார். இத்தகையதோர் வாழ்க்கையை வாழ்ந்து முடித்த அவரது ஆன்மா சாந்தியடைய எல்லோரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

**வரதா சண்முகநாதன் (Toronto)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A Tribute to Luxmi I met in 1962

It's my greatest pleasure and privilege to contribute to the memorial souvenir of my good old friend Luxmi.

I'm sure a light has gone out of the lives of Mr Sivasubramaniam – the husband and the three illustrious sons Visaharan, Kirubaharan and Suthaharan whose love and care Luxmi enjoyed for so many years in Jaffna, Nigeria and Canada.

My friendship with Luxmi started when she entered Palaly Training College in 1962. She was a mathematician to start with, but not only that, she was a lady of many talents – a multifaceted charismatic person. She was a well organized and methodical teacher. As I begin to unfold her memories, I remember she was a poet, a sportswoman, a counselor who lent her shoulder to cry for many who had problems and complaints, a dancer and a kind friend to one and all with plenty of religious beliefs. Once we left the training college, we lost touch with each other since I started my teaching in Kurunegala.

After I came over to Canada in 2003, I began searching for the old friends. We phoned each other often and the friendship was revived again. But to my surprise, the energetic and bubbling Luxmi became sickly. Then she mentioned about another good friend of hers and mine – Jeyamalar of Manipay and she died of cancer, suffering for a long time in Canada. While remembering the death of Jeyamalar, Luxmi said that a part of her died when she heard of the death of Jeyamalar. It was a testimony of her true friendship.

In all the phone calls of Luxmi, it was a sad repetition of her incurable disease, and the sufferings she undergoes. But she proudly confessed that her doctor son is trying his best to prolong her life in this world. She mentioned the services rendered by her husband in taking care of her by preparing delicate light meals for her. She was happy that all her sons inquire often about the health even if they were far away.

"To meet, to love and then to part is the saddest thing of the human heart"

It is so with you Luxmi !!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is hard and painful for friends and family members to digest your death. But in a way, we should be happy that your pain and suffering are no more.

You had a vision of the future, so you embarked on a new life in Nigeria for the betterment of your sons for twenty long years and it has been rewarded. I got to know from our telephone conversations that you were entrenched in the traditions of our homeland even in Canada. The clash of cultures could not diminish your passion for Tamil traditions. Thank you for sending the youngest son's wedding photos via email.

Now that you are gone leaving your memories behind, I pray you attain 'Moksha' soon as an award for your sufferings and the fulfillment of your duties in this world.

Good bye Luxmi !!

Prima Arunainathan (Nee Francis)
Vancouver, British Columbia

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











சக மாணவர் பிலிப்நேரி (பலாலி) யும் மனைவியும், சக மாணவி தேவராணி (வேலணை) யும், கணவரும், மேற்றன் (வேலணை), மலர் ரீச்சர் (வேலணை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மாணவரின் கலாச்சார நடவடிக்கையில்
ஈடுபாடு விக்டோறியாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










பிள்ளைகளுக்கு அறிவு புகட்டியவர்களுடன் கலந்துரையாடல், அல்பனி மெடிக்கல் சென்ரர், பேராசிரியர் சலோன், பேராசிரியர் நாஜி, இன்ரநெற்றில் தமிழ்மாநாடு, சன்பிரான்சிஸ்கோ 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பிள்ளைகளுக்கு கல்வியின் முக்கியவத்தை உணர்த்தியதன்
பயனாக அவர்களின் பட்டமளிப்பு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது நண்பி லக்ஷ்மி சிவசுப்பிரமணியம்

துள்ளித் திரிகின்ற வயது முதல் நாம் நல்ல நண்பர்களாக இருந்தோம். 1954ம் ஆண்டு முதல் எமது கல்லூரி "வேலணை மகா வித்தியாலயத்தின் திறப்புவிழா நிகழ்ச்சி" க்காக இருவரும் இணைந்து 2 நடனம் கற்றோம். அன்று முதல் எமது இணக்கம் இறுகியது. 1956ம் ஆண்டு எமது நடனமும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

லக்ஷ்மி மிகவும் உயர்ந்த பண்பும் அன்பும் உள்ளவர். வாழ்க்கையை மிகவும் நேசித்து ஒழுக்கத்துடன் பழகி வந்தவர். கல்வியையும் உயிராக நேசித்துக் கற்றவர். 5,6 வருடங்களாக பெண்கள் விடுதியில் நாங்கள் நெருங்கிய நண்பர்களானோம். எனது அம்மாவை (Matron) நேசத்துடன் Teacher என்று தான் அழைப்பார். எதற்கும் முன்னின்று பணிபுரியும் அன்பான பெண்.

பள்ளிக்கூட நாட்களில் 3:30 பாடசாலை முடிந்ததும் விடுதிக்கு ஓடிவந்து தேனீர் அருந்திவிட்டு நேரே Net Ball விளையாடப் போவோம். 6:00 மணி மட்டும் ஓரே விளையாட்டு. 6:00-8:00 படிப்பு. அதிலும் கெட்டித்தனமா இருந்தவர். என்றும் சிரித்த முகத்துடனும், மன உறுதியுடனும் பணிபுரிபவர். இன்றும் அவர் சிரித்த முகம் என் கண் முன் நிற்கின்றது.

எங்களுடைய நட்பை உறுதி செய்யும் அளவில், 2000ம் ஆண்டு அவர் தமது துணைவருடனும் இரண்டாவது மகனுடனும் அம்மாவைத் தேடி எங்களுடைய Markham வீட்டிற்கு வந்தார். கிட்டத்தட்ட 35 வருடங்களிற்குப் பின் எமது சந்திப்பு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அவர் ஒரு அரும்பெரும் பெண் மட்டுமல்லாது அன்பான மனைவியாகவும் அருமைத் தாயாராகவும் வாழ்ந்ததை நான் என் கண்ணூடாக கண்டுகொண்டேன். அருமை பெருமையாக மூன்று புதல்வர்களுக்கு தாயாராக மட்டுமல்லாது 6 பேத்திகளுக்கு பாட்டியாகவும் வாழ்வை சுவைத்த சுத்தமான ஆத்மா. என்றென்றும் அவரின் ஆத்மா உயர்ந்த நிலையில் இருக்கும் என்பது உறுதி.

ஏதோ போதாதகாலம் அவர் சுகவீனம் அடைந்தார். அப்படியும் தவறாது Phone, Email மூலம் எங்களுடைய தொடர்பு இருந்தது. அவர் சுகவீனமாக இருந்தபோது அவரை மொன்றியல் வீட்டில் சந்தித்தேன். அந்த சுகவீனத்திலும் என்னை மிகவும் அன்பாகக் கவனித்தார். எனக்கு தோசை, இட்லி தன் கையாலே செய்து தந்து மகிழ்ந்தார். இன்றும் என்னால் அதை மறக்கமுடியாது. இது இறைவனின் திருவிளையாடல்.

எங்களுடைய நட்பு இன்னும் தொடரும் என நம்புகின்றேன். உறுதியாக நீங்கள் இருக்கும் இடத்தில் வரவேற்பீர்கள் என்பது திண்ணம். அதுவரை இங்கு என்னுடைய கடமைகளை நிறைவேற்றியபின் இருவரும் சந்திப்போம். அதுவரை நண்பியே... உம்முடைய ஆனந்த நிலையையடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**நண்பி தேவராணி அம்பிகாபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்துப் பார்க்கின்றோம்

**சாவு** சாதாரண மனிதரை
சாகடிக்கும்
இலட்சிய மனிதரை
உயர்த்திவிடும்
ஊர் அறியச் செய்யும்
அவர்தம் இலட்சியத்தை
இதயங்களில் விதைத்து விடும்

1962ம் ஆண்டில்
பலாலி ஆசிரியர் பயிற்ச்சிக் கல்லூரியில்
லஷ்மி ஆசைப்பிள்ளையின்
அறிமுகம் கிடைத்தது

புதன்தோறும் சதாசகாய மாதா
நவநாள் வழிபாட்டில்
நண்பிகளுடன் கலந்து கொண்டபோது
ஆன்மீகத் தேடலின் ஆர்வத்தை அறிந்து கொண்டேன்

விளையாட்டுப் போட்டிகளில்
வேக ஓட்ட வேளைகளில்
கிரிக்கட்டில் பந்துவீசும் வேளைகளில்
உதைபந்தாட்ட வேளைகளில்
நண்பிகள் சகிதம்
உற்சாகம் ஊட்டி ஊக்கப்படுத்திய
உன்னத செயலை நினைதுப் பார்க்கின்றேன்.

கலை நிகழ்ச்சிகளில்
நாடகம் நாட்டியம் பாட்டு
ஆகியவற்றில் தன் திறமையைக் காட்டி
கலையரசியாகத் திகழ்ந்ததை
நினைத்துப் பார்க்கின்றேன்.

காலச் சக்கரம் சுழன்றது
நாம் எல்லோரும் சுழன்றோம்
திக்குத் திக்காக சென்றோம்

துணைவர் சிவா
சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர்
எம் இரு கல்லூரிகளில் பெரும்போரில் சந்திப்பு
பின் நைஜீரியாப் பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலச் சுழற்சியில்
கனடாவில் மீண்டும் பிள்ளைகளுடன் சந்திப்பு
என் துணைவியுடன் ஆசைப்பிள்ளை
எதிர்பாராச் சந்திப்பு
ஆசைப்பிள்ளை, யோன்பிள்ளை
மனந்திறந்த உரையாடல்
அன்புமிகு உறவாடல்
பிள்ளைகளிடம் தனிப்பட்ட பாசம்
தொலைபேசி உரையாடல்கள்
இருவரிடையும் அடிக்கடி நிகழும்
உதவிக் கரங்கள் உறுதுணையாகும்

நோயுற்ற வேளைகளில்
ஆன்மீக உரையாடல்
ஆறுதல் வார்த்தைகள்
அவருக்கு அளித்து வந்தோம்
பாசமிகு தாயின் துணைவியின்
நோவுகளைத் தாங்கும் சக்தியை பெற்றிட
கர்த்தர் கையில் ஒப்படைத்து செபித்தோம்

"மனம்மாறி என் நியமங்கள்
அனைத்தையும் கைக்கொண்டு
நீதியும் நேர்மையும் கடைப்பிடித்தால்
அவர்கள் வாழ்வது உறுதி
அவர் சாகார்" எசேக்கியல் 18:21

பிறந்த பொழுதே இறப்பும்
எம்முடன் இருக்கும்
எனவே!
இறைபதம்! இறைபதம்!!
இதுவே நிரந்தரம்

**நினைத்துப் பார்த்தோம்**
**திரு. திருமதி. பிலிப்நேரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி லக்ஷ்மி இரங்கற்பா

உனக்கிரங்கல் பாஎழுத நான்செய்த பாவமென்ன?
உன்சிரித்த முகங்காணா தேங்குகிறோம் வாமுன்நி!
கங்குலுக்கு உணவாகிக் காற்றில் நீ கலந்தாயோ?
எங்கு என்று காண்பதுன்னை! அன்புத்தாய் ஆனவளே!

கன்னல் சுவைபெரிதா? கனிவுந்தன் பார்வைமுன்!
உன் எண்ணம் சிந்தையெலாம் எம்சிறப்பு வாழ்வெண்ணி!
இன்றோஉன் வழிகண்டு எங்கோநீ போய்விட்டாய்!
கன்றிங்கே பசுகாணா தேங்குவது காண்தாயே!

திருமகளின் பெயர்கொண்ட தேவதையே! தண்ணிலவே!!
மறுஉலகம் நீசென்றாய்! மருகித்தான் தவிக்கின்றோம்!
பெறுஎல்லாப் பேறங்கு! இறையவனை வேண்டுகிறோம்!
என்றேனும் ஒருநாளில் உனைக்காண வருவோம் யாம்!

அன்பு உயிர்

ராம் (Fremont)
Little Rock, Arkansas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி.இலட்சுமிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்.

ஒரு நாள் செவ்வாய் கிழமைக் காலை வேளை தமிழ் வானொலி கேட்டுக் கொண்டே வேலைக்குச் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு குரல் "நான் கானடாவிலிருந்து லட்சுமி சிவசுப்பிரமணியன் கதைக்கிறேன்" என்று ஆரம்பித்தது. அவர்கள் அன்று சொன்ன அந்த அறிவுரையை நான் இன்றும் மறக்கவில்லை.

அவர்கள் சொன்னதாவது, இலங்கையிலே சுதா பிறந்திருந்த வேளையிலே மிகுந்த பஞ்சம் ஏற்பட்டது. (இலங்கை மட்டுமல்ல, அந்தக் காலக்கட்டதிலே பெருவாரியான நாடுகள் பஞ்சத்தில் தான் இருந்தது.) இதன் காரணமாக, பால் வாங்கக் கூட வழியில்லாமல் தவிக்க வேண்டி வந்தது. அப்படியெல்லாம் துன்பங்களை அனுபவித்து, இன்று நல்ல நிலையில் முன்னேறி இருக்கும் பொழுது, பழையவற்றை மறக்காமல் நல்ல முறையிலே நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள்.

அன்று அவர்கள் சொன்னது சுதாவிற்கு மட்டுமல்ல, ஒவ்வொரு நேயரும் எடுத்துக் கொள்ள வேண்டிய நல்ல அறிவுரை. தன் மகன் தானே நிகழ்ச்சி நடத்துகிறார், நாம் அழைத்துத் தற்பெருமையாக ஏதாவது பேசிக் கொள்வேமே என்று நினைக்காமல் உண்மையுடனும், தூய உள்ளத்துடனும் அவர்கள் பேசியது என்னை மிகவும் கவர்ந்தது. அவர்கள் மீது மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. அதன் பிறகு அவர்கள் பலமுறை வானொலியில் அழைத்துப் பேசி இருக்கிறார்கள் என்றாலும், நான் மீண்டும் அவர்கள் பேச்சை நினைவு கூர்வது என்பது 'மோஸ்டிலி தமிழ் தீபாவளி' நிகழ்ச்சியில் அவர்கள் அளித்த உரையிலே தான்.

தமிழிலே ஒரு பழமொழி இருக்கிறது. 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்பார்கள். பெற்ற மனமும் பித்துத்தான். பிள்ளை மனமும் பித்துத்தான் என்று சுதா அம்மா சொன்னார்கள். பொதுவாக இப்படி மனம் விட்டுத் தன்னுடைய அன்பிற்கு நிகராகத் தன் பிள்ளைகளும் அன்பு செலுத்துகிறார்கள் என்று சிந்தித்துப் பார்க்கின்ற பெற்றோர்கள் மிகவும் அரிதுதான்.

வெகுகாலமாக நான் நெடுந்தொலைவில் இருந்தே திருமதி.லட்சுமி சிவசுப்பிரமணியம் அவர்களின் பேச்சைக் கேட்டு வந்தேன். ஒரு முறை அவர்களை நேரில் சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிட்டியது. அவர்களைப் பற்றி பல செய்திகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று நினைத்துத் தான் சென்றேன். ஆனால் அன்று மாலை முழுவதும், என்னைப் பற்றியும், என் பெற்றோர்கள் பற்றியும் பல விதமாக விசாரித்துத் தெரிந்து கொண்டு மிக அன்புடனும் ஆதரவுடனும் அவர் பேசினார். தவறிக்கூட தன்னைப் பற்றியோ, தன் குடும்பத்தைப் பற்றியோ தற்பெருமையாக எதுவுமே பேசவில்லை என்பது என்னை வியக்க வைத்தது. அவர்களுடைய மகனின் திருமணம் ஏற்பாடாகியுள்ள செய்தியைச் சொன்னார். அப்போது அவர் சொன்ன வார்த்தைகள் மேலும் மறக்க முடியாதவை. 'மருமகள் வருகிறார் என்று நினைக்காமல், மகள் வருகிறார் என்று நினைத்து விட்டால், வாழ்க்கை என்றும் மகிழ்ச்சியாக இருக்கும்' என்றார். இது போன்ற உன்னதமான ஒரு பெண்மணியை சந்தித்துப் பேசியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்

என்று திருவள்ளுவர் கூறியது திருமதி.லட்சுமி சிவசுப்பிரமணியம் அவர்களைப் பொறுத்தவரையில் உண்மை என்றே நினைக்கின்றேன்.

Bagirathi Seshappan
Tamil Manram,
San Francisco

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Memories of Late Mrs. Luxmipillai Sivasubramaniam.

We celebrate the life of Luxmipillai Sivasubramaniam. For us she was a loving, kind, humble, generous and deeply spiritual lady. Her legacy will forever remain in the hearts of all associates because of her selfless love for those around her and above all her dedication to her immediate and extended family. She was a beloved wife, concerned and caring mother, mother-in-law, fun loving and adoring grandmother and a true friend. Her devotion to the family was evident from how successfully her three boys and her six grand daughters were brought up. From my heart, I can say that I am yet to meet someone as self-sacrificing as Luxmipillai - whom everyone called "Sup Aunty" with love.

Life is a cycle.

When it was down she brought up her three boys very well, educating, guiding and advising by maintaining good communication with them at all times. They were then living inside the Government College school compound with limited facilities in Nigeria.

When the wheel rolled up, they moved to the city centre in Ibadan Nigeria and made life comfortable. We became very close friends. She was so nice; we cannot forget all the joyous memories that we have shared which we will treasure forever. She joined us in Sai activity in Sai Centre and attended all the functions and parties with us where she always took a leading role and made the functions lively. For close friends she wrote "Waalthu Paa" and read and honoured them.

The sons got very good results in their school exams and entered universities. They did extremely well and made their parents happy. After graduating all the sons moved to U.S.A and pursued higher degrees. As a mother she made them find suitable partners and got them married. She was blessed with six Granddaughters whom she loved and took proper care. Touch wood, we joined her in celebrating their success.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Then when she fell sick it was a terrible blow to her family and us who loved her so much and didn't want her to suffer. Everything possible was arranged and done for her recovery. Mr. Siva and the children stood by her and tried all the best and provided the best care and comfort. Even with the sickness she travelled frequently to U.S.A and took care of her granddaughters, attended and wished them for their birthdays and other functions.

She got hospitalised early this year and was under intensive care till the time came to depart. She has enjoyed a prosperous life. What is destined to happen will happen. May her soul rest in peace.

Our sincere condolences to Mr. Siva, Haran, Kiruba, Sutha and their families.

SAI RAM.

Savunda Uncle and Thevy Aunty
London

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








நைஜீரியாவில் ஆரம்பித்த பகவானைத் தேடல்
பிருந்தாவனத்தில் சாயி தரிசனம் 200ம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இளமையில் ஆரம்பித்த சமயவழிபாடு மற்றும் கவிதை இயற்றுவதில் திறமை. நைஜீரியாவில் வெளிப்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









அமெரிக்காவில் சந்தித்த ராம் குடும்பம், Charc குடும்பம்,
நரேந்திரன் குடும்பம், கணேஷ் பாபு குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









நைஜீரியாவில் சந்தித்த நண்பர்களுடன் உறவாடல் திருமதி. தேவராஜா (லண்டனில்)
திரு. திருமதி. சவுந்தரராஜா கூலும் மனைவியும் (அல்பனியில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Aunty Luxmi (Sivasubramaniam)

Jeevan Hoole

